273
4.55

# வக்கீல்

273

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 OCT 1955
MADRAS

**1955**

இதழ் 4

(ஜுலை—ஆகஸ்டு)

பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட விஷயங்களையும் எளிய தமிழ் நடையில் விளக்கும் மாத வெளியீடு.



**இந்த இதழில்**

புதிய
இந்து விவாகச்
சட்டம்

விலை அணா 4.

(All Rights Reserved.)

**THE VAKIL ✶ TAMIL LAW MAGAZINE**

## "வக்கீல்"

**பொது மக்களுக்கான உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை**

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. விஷயங்களை ஒட்டி மாதம் ஒருமுறை பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.


**ஆசிரியர் கமிட்டி**

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
" G. நாகராஜ பத்தர், B.A., B.L.,
" V. இராகராஜன், B.A., B.L.,
" A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
" S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
" T. S. வெங்கடராமன், B.A., B.L.,
" R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
" R. கோபாலசாமி, B.A., B.L.,
" C. R. வீரராகவன், M.A., B.L.,
" R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
" P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
" V. S. விஜயராகவாச்சாரி, B.A., B.L.,

[ ஆசிரியர் ]


## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதாரர்கள் கவனிக்கவும்:—வருடச் சந்தாதாரர்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருடச் சந்தாதாரர்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணா 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதாரர்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

மானேஜர் " வக்கீல் " காரியாலயம்

தபால் பெட்டி 26, கும்பகோணம்

(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

## "வக்கீல்" அறிவிப்பு

"வக்கீல்"-1954-பொருள் அட்டவணை :— வருட சந்தாதாரர்களுக்கு மட்டில் அடுத்த இதழுடன் சேர்த்து அனுப்பப்படும். அதை அந்த இதழிலிருந்து எடுத்து 1954-இதழ்களுடன் பைண்டு செய்து கொள்ளவேண்டும். அடுத்த இதழ் இப்பொழுது சட்டசபை விவாதத்திலிருக்கும் சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் (1955) வந்தவுடன் உடனடியாக பிரசுரம் செய்யப்படும். அநேகமாக இம்மாதக் கடைசியிலேயே பிரசுரம் செய்யப்படலாம்.

*  *  *  *

ஏற்கனவே "வக்கீல்" பத்திரிகைக்கு டிராவலிங் ஏஜண்டாக இருந்த தண்டாங்கோரை திரு T. S. வெங்கடராமய்யர் அவர்களுடைய ஏஜன்சியை 1954-டிசம்பர் மாதத்திலேயே ரத்து செய்து விட்டோம். அதற்குப் பிறகு ஷையாருக்கும் "வக்கீல்" பத்திரிகைக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை. "வக்கீல்" பத்திரிகைக்குச் சந்தா சேர்க்கவோ வேறு தொகைகள் வசூலிக்கவோ அதுமுதல் ஷையாருக்கு உரிமை இல்லை. சில "வக்கீல்" சந்தாதாரர்களிடமிருந்து கிடைத்த தகவல்களால் இதை பிரசுரம் செய்கிறோம். சந்தாத் தொகையை நேரில் ஆபீசுக்கு மணியாடர் செய்யவும்.

வெண்சங்கு நறுமணை

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்–தஞ்சாவூர்..

சீயக்காய்த் தூள்

ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ அன்னகிளி ★

சோப்

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஓர்க்ஸ்

P. B. No. 22 :: தஞ்சாவூர்.

உத்திரவாதமுள்ள உயர்ந்த ரக
ஜரிகை பட்டு ஜவுளி தினுசுகள்
விலை நயமாக கிடைக்கும்.

மாருதி விலாஸ்

அறியா. மு. ராமஸாமி அய்யர்
சுத்தபட்டு ஜவுளி வியாபாரம்
சாலைத்தெரு
அய்யம்பேட்டை
தஞ்சாவூர் ஜில்லா

'வக்கீல்'

# பொருள் அடக்கம்

மலர் 7 July - August 1955 இதழ் 4

குறிப்புகள்

ஜினீவா 4

தமிழ் மொழியும் சென்னை அரசாங்கமும் 4

புதிய சட்டங்கள்

1955-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள் 6

1954-ஆம் வருடத்திய மத்திய சட்டங்கள் 7

1955-ஆம் வருடத்திய மத்திய சட்டங்கள் 9

இந்து விவாகச் சட்டம் (1955) 10

## பிழைத் திருத்தம்

"வக்கீல்" 1955 இதழ் 3 பக்கம் 14-ல் "வரிகள்" என்ற பகுதியில் "நான்கு நபர்கள் அடங்கிய குடும்பமாக இருந்தால் ரூ. 13600க்கு மேலும் வருமானம் இருந்தால்தான் வருமான வரி உண்டு"–என்று இருப்பதில் "ரூ. 13600" என்பதை "ரூ. 12,600" என்று திருத்தி வாசிக்கவும்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR AND PUBLISED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT No. 73, DABIR WEST STREET, KUMBAKONAM FOR THE VAKIL PUBLICATIONS LIMITED, *Editor* V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
187739
சென்னை-600 008

# வக்கீல்

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

மலர் 7 ஜூலை—ஆகஸ்டு 1955 இதழ் 4

## ஜினீவா

நேற்றுவரை ஒருவரை ஒருவர் நசுக்கி விட வேண்டுமென்று பயமுறுத்திக் கொண்டிருந்த அமெரிக்காவும் ருஷ்யாவும் சென்ற மாதம் ஜினீவா நகரில் சந்தித்தன. இதுவரை அயல்நாடுகளுடன் பேச நேரில் வராமல் தூதர்களையே அனுப்பி வந்த அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரும், அதைப் போலவே வெளி நாட்டில் தலை காண்பிக்காத ருஷ்ய பிரதமர் புல்கானினும் நேரில் சந்தித்து கைகுலுக்கிக் கொண்டனர். ஏன்? இதற்கு ஒரே காரணம்தான் இருக்கிறது. இவ்வுலகில் இவ்விருவரிடமும்தான் உலகையே அழிக்கக்கூடிய அணுகுண்டுகளும், ஹைட்ரஜன் குண்டுகளும் இருக்கின்றன. ஒவ்வொருவரும், மற்றவரிடம் இதே குண்டுகள் இருக்கின்றன என்ற உண்மையைக் கண்டுகொண்டவுடன் ஒரு தினுசாக சிநேகிதர்களாகி விட்டனர். இனி அணுகுண்டு யுத்தம் வராது. வந்தாலும் பயமில்லை. ஏனென்றால் இக்குண்டுகள் யுத்தத்தில் உபயோகிக்கப்பட்ட பிறகும் கூட மனிதவர்க்கம் உயிருடனிருந்தால் தானே பயப்படுவதற்கு!

## தமிழ் மொழியும் சென்னை அரசாங்கமும்

ஆங்கிலேயர் இந்நாட்டை நம்மிடமே ஒப்படைத்து எட்டு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டன. நமக்குநாமே ஒரு அரசியல் திட்டத்தை அமைத்துக் கொண்டும் ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன. ஆனால் இன்று வரை நமது அரசாங்கத்தை ஆங்கிலத்திலேயேதான் நடத்தி வருகின்றனர். சட்டங்கள் மசோதாக்கள், விதிகள், சர்க்கார் அறிக்கைகள், அதிகாரிகளின் நடவடிக்கைகள், கோர்ட்டு வாக்குவாதங்கள், தீர்ப்புகள் முதலிய யாவும் ஆங்கில மொழியிலேதான் எப்பொழுதும் போலவே நடந்து வருகின்றன. ஏன்? இவற்றை எல்லாம் தாய் மொழியிலேயே நடத்தச் சட்ட பூர்வமான தடைகள் ஏதாவது இருக்கின்றனவா?

சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்ட வரையில், இங்கே அரசாங்க அலுவல்கள் எல்லாம் தமிழில்தான் நடத்தப்பட வேண்டுமென்று உடனடியாகச் செய்து விட நமது சட்ட சபைக்கு அதிகாரம் இருக்கிறது. (அரசியல் அமைப்புச் சட்டம் ஆர்டிகிள் 345.) அப்படிச் செய்வதை மத்திய அரசாங்கமோ அல்லது பார்லிமெண்ட் சபையோ தடுக்க முடியாது. சென்னை ராஜ்யச் சட்டங்களும், மசோதாக்களும், விதிகளும், அறிக்கைகளும்கூடத் தமிழிலேயேதான் இருக்க வேண்டுமென்றும் நமது சென்னைச் சட்ட சபை இஷ்டப்பட்டால் செய்து விடலாம். (அரசியல் அமைப்புச் சட்டம் ஆர்டிகள் 348 (3). நமது ஹைகோர்ட்டின் நடவடிக்கைகள் கூடத் தமிழில்தான் இருக்க வேண்டுமென்று ஜனாதிபதி அவர்களின் சம்மதத்தின்பேரில் செய்துவிடச் சென்னை அரசாங்கத்திற்கு உரிமை உண்டு. (ஆர்டிகிள் 348 (2). அரசியல் அமைப்புச் சட்டப்படி நமக்கு இப்போதிருக்கும் உரிமைகளை உபயோகப்படுத்தினாலே உடனடி

யாக தமிழ் நாட்டின் மொழிப் பிரச்னை இங்கு பெரும்பாலும் தீர்ந்துவிடும்.

இந்திய அரசாங்க மொழி சம்பந்தமாகவும் சுப்ரீம் கோர்ட்டின் மொழி சம்பந்தமாகவும் மட்டில் சென்னை அரசாங்கம் தனிமையில் ஒன்றும் செய்து விடமுடியாது என்பது உண்மை. ஆனால் தன்னால் இப்பொழுதே செய்துவிடக்கூடிய காரியத்தை நமது சென்னை அரசாங்கம் ஏன் இன்னும் செய்யவில்லை? தமிழ் பேசாத இரண்டு ஜில்லாக்கள் இன்னும் நம்முடன் இருக்கின்றன என்பது ஒரு சாக்கு. இந்த நிலைமையையும் சமாளிக்க உதவும் ஷரத்துக்கள் அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இருக்கின்றன. ஆனால் உண்மையான தடைகள் வேறு இருக்கின்றன. இது வரையில் ஆங்கில கலாசாரத்திலேயே ஊறி அதிலேயே நீந்தி, அதனாலேயே இப்போதைய அரசாங்கத்தின் கேந்திர ஸ்தானங்களை வகித்துவரும் உயர்தர அதிகாரவர்கத்தினர்தான் முதல் தடை. முன்பு தாய்நாட்டையும் அத்துடன் தாய் பாஷையையும் பரிகசித்து அவமதித்து வந்த பல உயர்தர அதிகாரிகள் இன்னும் 'பென்ஷன்' வாங்கிக் கொள்ளவில்லை. நமது ஜனநாயக அரசாங்கமானது எதற்கும் இவர்களுடைய தயவையே நாட வேண்டியிருக்கிறது. இவர்கள் முட்டுக்கட்டை போட்டால் அரசாங்க அலுவல்கள் நின்று விடுமோ என்ற பயம் நமது மந்திரிமார்களுக்கிருக்கலாம். இரண்டாவதாக ஆங்கிலம் படித்த மக்களிடையேயும் ஒரு இழிவு மனப்பான்மை இன்னும் மறையவில்லை. ஆங்கிலேயரைவிட எந்த விஷயத்திலும் நாம் தாழ்ந்தவர்களே என்று ஆரம்பப் பள்ளியிலிருந்து கட்டாயப் பாடங் கற்றுக்கொண்ட தலைமுறை இன்னும் மறையவில்லை. உறவினர்களுக்கு எழுதும் சொந்தக் கடிதங்களையும், திருமணப் பத்திரிகைகளையும், சிநேகிதர்களுடன் பேசுவதையும்கூடத் தமிழில் எழுதுவதும் பேசுவதும் இவர்கள் அந்தஸ்துக்குக் குறைவாக இவர்கள் நினைக்கின்றனர். உடனடியாகச் சென்னை ராஜ்யத்தின் அரசாங்க மொழியானது தமிழ் மொழிதானென்று சட்ட பூர்வமாகச் செய்யக் கூடியவற்றை நமது சட்டசபை செய்து விட்டால், 'ஹிந்தி' பிரச்னையானது ஒரு பெரிய பிரச்னையே அல்ல. அகில இந்தியத் தொடர்புக்காக நமக்கு ஹிந்தி வேண்டும். அகில உலகத் தொடர்புக்காக நமக்கு ஆங்கிலமும் வேண்டும். ஆனால் இது பொது மக்களை அதிகமாகப் பாதிக்கும் பிரச்னையே அல்ல.


# சென்னை சாகுபடிதார் பாதுகாப்புச் சட்டம் (1955)

அடுத்த "வக்கீல்" இதழில் விவரமாக விளக்கப்படும்.

இச்சட்டம் வந்தவுடன் அடுத்த இதழ்

பிரசுரம் செய்யப்படும்.

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1955-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்

[சென்னை சட்ட மன்றத்தாரால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னைச் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

### 9. சென்னைச் சினிமாச் சட்டம்.

**Madras Cinemas Regulation Act 1955. (27-4-1955.)** சினிமா நடத்த லைசென்சு வாங்கிக் கொள்வது பற்றிய சட்டம். விஞ்ஞானம் அல்லது கல்வி சம்பந்தமான படங்களேயோ, பொது மக்களுக்கு உபயோகமான படங்களேயோ காட்டவேண்டு மென்று வற்புறுத்த இச் சட்டத்தின் செக்ஷன் 6 சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கிறது.

### 10. சென்னை சிடி சிவில் கோர்ட்டு சட்டத் திருத்தம்.

**Madras City Civil Court Amendment Act 1955. (27-4-55)** சென்னை சிடி சிவில் கோர்ட்டுக்கு ரூ. 50,000 வரை மதிப்புள்ள தாவாக்களை ஏற்றுக்கொண்டு விசாரிக்கும்படி குறிப்பிட்ட தேதி முதல் சர்க்காரால் அதிகாரம் கொடுக்கப்படலாமென்று செக்ஷன் 3A திருத்தப்பட்டிருக்கிறது. சிடி சிவில் கோர்ட்டுக்கு ஒரு பிரதான நீதிபதியும் வேறு அடிஷனல் அல்லது உதவி நீதிபதிகளும் நியமிக்கப்படுவார்கள். ரூ. 5000க்கு மேல் மதிப்புள்ள தாவாக்களில் ஏற்படும் தீர்ப்புக்களின் பேரிலும், பிரதான நீதிபதியோ, அடிஷனல் நீதிபதியோ செய்யும் தீர்ப்பின் பேரிலும்தான் நேரடியாக ஹைகோர்ட்டுக்கு அப்பீல் உண்டு என்றும்; ரூ. 5000 மதிப்புக்குக் குறைந்த தாவாக்களில் உதவி நீதிபதிகளால் செய்யப்படும் தீர்ப்புக்களின் பேரில் அதே கோர்ட்டின் பிரதான நீதிபதிக்குத்தான் அப்பீல் செய்யப்பட வேண்டு மென்றும் செக்ஷன் 15 திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சட்டம் அமுலுக்கு வரும்போது சென்னை ஹைகோர்ட்டில் பெண்டிங்காக இருக்கும் அப்பீல்கள், அதாவது இத் திருத்தச் சட்டப்படி சிடி சிவில் கோர்ட்டிலேயே விசாரிக்க வேண்டியதான அப்பீல்கள், சிடி சிவில் கோர்ட்டுக்கே மாற்றப்படும். இத்திருத்தச் சட்டம் சர்க்காரால் கெஜட்டில் குறிப்பிடப்படும் தேதி முதல் தான் அமுலுக்கு வரும்.

### 11. தஞ்சைச் சத்திர நிதி உபயோகச் சட்டத் திருத்தம்.

**Tanjore Chatram Endowments-utilization-Amendment Act 1955. (27-4-1955)** தஞ்சாவூரில் ஒரு முதல் கிரேடு காலேஜ் ஏற்படுத்தி அதை நடத்துவதற்காக தஞ்சைச் சத்திர தர்ம நிதியிலிருந்து ரூ. 4,94,500 ஒதுக்கி வைக்கவும், அதன் வட்டியை அக் காலேஜுக்காகச் செலவு செய்யவும் அச்சத்திர நிதியைப் பரிபாலனம் செய்து வரும் தஞ்சை ஜில்லா போர்டுக்கு, அதிகாரம் அளிக்கும் சட்டம். அதற்காக 1942-ம் வருடத்திய தஞ்சைச் சத்திர நிதிச் சட்டத்தின் வாசகம் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது.

### 12. பிரசிடென்சி ஸ்மால்காஸ் கோர்ட் சட்டத் திருத்தம்.

**Presidency Small Cause Courts—Madras Amendment Act 1955. (27—4—1955)** பாபர் வியாஜ்யங்களில் சர்க்காருக்குச் சேரவேண்டிய கோர்ட் பீச் தொகைகளை வசூல் செய்ய இச்சட்டத்தில் சில புதிய ஷரத்துக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. மேலும் தாவாக்களுக்கு ரூ. 10க்கு அணு 12 வீதம் கோர்ட் பீசு கட்டணம் கட்டவேண்டு மென்று செக்ஷன் 71 திருத்தப்பட்டிருக்கிறது. சென்னை ஸ்மால்காஸ் கோர்ட் சம்பந்தப்பட்ட வரையில் வேறு சில கோர்ட்பீசு கட்டணங்களும் மாற்றப்பட்டிருக்கின்றன. ரிவ்யூ மனுக்களுக்கு பாதி கோர்ட்பீசு கட்டவேண்டும். இத்திருத்தச் சட்டம் சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதி முதல் அமுலுக்கு வரும்.

### 13. பொது விற்பனைவரி, புகையிலை விற்பனை வரிச் சட்டங்கள் திருத்தம்

**Madras General sales Tax and Madras Tobacco Taxation of sales and Registration Amendment Act 1955. (12-5-1955)** 1939-ம் வருடத்திய சென்னைப் பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 5-ல் கீழே கண்ட ஷரத்துக்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதாவது:—(1) ஒவ்வொன்று இரண்டு அணுவுக்குக் குறைவான

சிகார் அல்லது சுருட்டு விற்பனைக்கும்; பீடி, பொடி, வாய்ப்புகை, அல்லது புகையிலையிலிருந்து தயாரிக்கப்பட்ட மற்ற சரக்கு விற்பனைக்கும் ரூபாய் ஒன்றுக்கு 6 தம்படி வீதம் இச்சரக்கைச் சென்னை ராஜ்யத்தில் முதல் முதலில் விற்பனை செய்யும் வியாபாரி மட்டில் விற்பனை வரி கொடுக்கவேண்டும். (2) பாடம் செய்யப்பட்டோ, பாடம் செய்யப்படாமலோ இருக்கும் கச்சாப் புகையிலையை (Raw tobacco) சென்னை ராஜ்யத்தில் முதல் முதலில் வாங்கும் வியாபாரி மட்டில் அவர் வாங்கிய தொகை மீதுக்கு ரூ. 1க்கு 6 தம்படி வீதம் விற்பனை வரி கொடுக்கவேண்டும். ஒரு வியாபாரியானவர் தாம் கச்சாப் புகையிலை வாங்கிய தொகைக்கு விற்பனை வரி கொடுத்து விட்டு அச்சரக்கைக் கொண்டு செய்யப்பட்ட புகையிலைச் சரக்குகளை விற்பனை செய்வதற்காகவும் அவரே விற்பனை வரியும் கொடுத்தால், அவர் கச்சாப் புகையிலை வாங்கியதற்காகக் கொடுத்த வரித்தொகை அவருக்கு வஜா செய்யப்படும். குறிப்பு:—1953-ம் வருடத்திய புகையிலை வரிச் சட்டப்படி எந்தெந்த புகையிலைச் சரக்குகளுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறதோ அச்சரக்கு விற்பனைக்குப் பொது விற்பனை வரிச்சட்டம் கிடையாது என்று பொது விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 4ன் வாசகமும் திருத்தப் பட்டிருக்கிறது. 1953-ம் வருடத்திய புகையிலை விற்பனை வரிச் சட்டமும் திருத்தப் பட்டிருக்கிறது. இச் சட்டத்தின் செக்ஷன் 4 (3)-ன் படி அடியில் கண்ட விகிதப்படி வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அதாவது:—

| | வரி விகிதம் மொத்த வியாபாரத் தொகையில் |
|---|---|
| (1) சில்லரையில் 3 தம்படிக்கு அதிகப்படாமலும் வரிக்குட்பட்ட வியாபாரியால் 3 தம்படிக்கு குறைந்தும் விற்கப்படும் சிகரெட்டுகளுக்கு | 3⅛ சத விகிதம் |
| (2) சில்லரையில் 6 தம்படிக்கு அதிகப் படாமலும் வரிக்குட்பட்ட வியாபாரியால் 6 தம்படிக்குக் குறைந்தும் ஆனால் 3 தம்படிக்குக் குறையாமலும் விற்கப்படும் சிகரெட்டுகளுக்கு | 10 சத விகிதம் |
| (3) சில்லரையில் 9 தம்படிக்கு அதிகப்படாமலும் வரிக்குட்பட்ட வியாபாரியால் 9 தம்படிக்குக் குறைந்தும் ஆனால் 6 தம்படிக்குக் குறையாமலும் விற்கப்படும் சிகரெட்டுகளுக்கு | 20 சத விகிதம் |
| (4) மேலே குறிப்பிடப்பட்ட இனங்கள் எதிலும் அடங்காத சிகரெட்டுகளுக்கு | 30 சத விகிதம் |
| (5) ஒவ்வொன்று இரண்டு அணுவுக்குக் குறையாமல் விற்கப்படும் சிகார், சுருட்டு இவைகளுக்கு | 30 சத விகிதம் |
| (6) சுங்கான் புகையிலை (Pipe tobacco) அல்லது சிகரெட் புகையிலைக்கு | 30 சத விகிதம் |

குறிப்பு:— 3 தம்படிக்குக் குறைந்த விலையுள்ள சிகரெட்டுகளுக்கு முன்பு விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இப்போது அதற்கும் புகையிலை விற்பனை வரிச்சட்டப்படி வரி உண்டு. இரண்டணுவுக்குக் குறைந்த விலையுள்ள சிகார் அல்லது சுருட்டுக்கு புகையிலையில விற்பனை வரிச் சட்டப்படி வரி இல்லை. ஆனால் இவைகளுக்கும் சரி, பீடி, பொடி, வாய்ப் புகையிலை போன்றவையும் புகையிலை விற்பனை வரிச் சட்டப்படி வரி விதிக்கப்படாதவையுமான மற்ற எல்லாவகைப் புகையிலை சம்பந்தப்பட்ட விற்பனைகளுக்கும் இப்போது ஒரு கட்டத்தில் மட்டில் பொது விற்பனை வரிச் சட்டப்படி விற்பனை வரி விதிக்கப்படும். இத்திருத்தச் சட்டம் 1-4-1955 முதல் அமுலுக்கு வந்ததாக பாவிக்கப்படும்.

## 1954-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

### 39. இந்தியத் தீர்வைப் பட்டி இரண்டாவது திருத்தச் சட்டம்.

Indian Tariff, Second Amendment Act 1954. (2-10-1954) ஏற்றுமதி இறக்குமதி சரக்குகளுக்குத் தீர்வைப்பட்டி திருத்தப் பட்டிருக்கிறது.

### 40. மத்திய அரசாங்கச் செலவு அனுமதி (மூன்ருவது) சட்டம்.

Appropriation (No. 3) Act 1954 (4-10-1954) 1954-55 நிதி வருடத்தில் இச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் விஷயங் களுக்காக இன்னும் ரூ. 2,15,60,68,000 செலவு செய்ய மத்திய அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 42. குடிபெயர்ந்தோர் சொத்து நிர்வாகச் சட்டத் திருத்தம்.

Administration of Evacuee Property Amendment Act 1954. (8-10-1954)

### 43. விசேஷ விவாகச் சட்டம்.

The Special Marriage Act 1954. (9-10-1954) பதிவுத் திருமணம் செய்து கொள்வதைப் பற்றிய இச்சட்டம் "வக்கீல்" 1954 இதழ் 11ல் விவரமாக விளக்கப்பட் டிருக்கிறது.

### 44. அகதிகள் நஷ்ட ஈடு புனருத் தாரணச் சட்டம்.

Displaced persons Compensation and Rehabilitation Act 1954. (9-10-1954)

### 46. இந்திய தீர்வைப்பட்டி மூன்ருவது திருத்தச் சட்டம்.

Indian Tariff Third Amendment Act 1954. (23-12-1954)

### 47. மத்திய அரசாங்கச் செலவு அனுமதி (நான்காவது) சட்டம்.

Appropriation (No. 4) Act 1954. (23-12-1954) 1954-55 நிதி வருடத்தில் இன்னும் ரூ. 18,97,30,000 செலவு செய்ய மத்திய அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 48. தொழில் தகராறு சட்டத் திருத்தம்.

Industrial Disputes Amendment Act 1954. (23-12-1954) தொழிற்சாலைகளில் வேலை இல்லாமலிருக்கும்போதுகூட சில சந்தர்ப்பங்களில் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று தொழிற்சாலைச் சட்டம் 1953ல் திருத்தப்பட்டது. ஆனால் தொழிற்சாலைச் சட்டப்படி 'தொழிற்சாலை' களாக இருக்கும் ஸ்தாபனங்களுக்கும் சுரங்கங் களுக்கும்தான் இத்திருத்த ஷரத்து உபயோக மாக இருந்தது. இப்போது 1951-ம் வருடத்திய தோட்டத் தொழிலாளர் சட்டப் படிக்கான தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கும் இந்த ஷரத்து விஸ் தரிக்கப்பட்டிருக்கிறது. அதாவது சில சந்தர்ப் பங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்கு முதலாளியானவர் வேலை கொடுக்க முடியாமல் இருந்தாலும்கூட தொழிலாளர்களுக்குச் சம் பளம் மட்டும் கிடைத்து வரும்.

### 49. தேயிலைச் சட்டத் திருத்தம்.

Tea Amendment Act 1954. (23-12-'54)

### 50. காபி மார்க்கெட் விஸ்தரிப்புச் சட்டத் திருத்தம்.

Coffee Market Expansion Amendment Act 1954. (24-12-1954)

### 51. தடுப்புக்காவல் சட்டத் திருத்தம்.

Preventive Detention Amendment Act 1954. (24-12-1954) இச்சட்டம் இன்னும் 3 வருடங்களுக்கு அமுலில் இருக்கும்படி திருத்தப்பட்டிருக்கிறது.

### 52. தேயிலைச் சட்ட இரண்டாவது திருத்தம்.

Tea-second Amendment Act 1954. (24-12-1954) தேயிலை போர்டு மெம்பர் பார்லிமெண்ட் அங்கத்தினராகவும் இருக்கலா மென்று செக்ஷன் 4 திருத்தப்பட்டிருக்கிறது.

### 54. ரப்பர் (உற்பத்தி விநியோக) சட்டத் திருத்தம்.

Rubber—Production and Marketing Amendment Act 1954. (24-12-1954) ரப்பர் சம்பந்தமான தொழிலானது, பொது மக்களின் நன்மையை உத்தேசித்து மத்திய சர்க்காரின் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ளப்படவேண்டிய சரக்காக பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறது. 1947-ம் வருடத்திய ரப்பர் சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

### 55. தேர்தல் தொகுதிக் கமிஷன் சட்டத் திருத்தம்.

Delimitation Commission Amendment Act 1954. பார்லிமெண்ட் தேர்தல் களுக்காகவும் ராஜ்ய சட்டசபைத் தேர்தல்

களுக்காகவும் தொகுதிகள் பிரிப்பதற்கான 1952-ம் வருடத்தியச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது. கடைசியாக ஏற்பட்ட ஜன கணிதையை வைத்துக் கொண்டு ஷிடியூல் ஜாதியினருக்கும் ஷிடியூல் மலை ஜாதியினருக்கும் பார்லிமெண்டு சபையிலும் ராஜ்ய சட்ட சபைகளிலும் பிரதிநிதித்தவம் கொடுக்கப்பட்டிருந்தது. 1-1-1956க்குள் கடைசி ஜன கணிதையில் இவர்களைப்பற்றிய திருத்தம் ஏதாவது ஏற்பட்டால் அதை ஆதாரமாகக்கொண்டு மறுபடியும் அவர்களுக்கான பிரதிநிதிகளின் எண்ணிக்கையை மாற்ற எலெக்ஷன் கமிஷனுக்கு இத்திருத்தச் சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

## 1955-ம் வருடத்திய மத்திய சட்டங்கள்.

### 1. பத்திரிக்கைத் தொழில் தகராறுச் சட்டம்.

Working Journalists Industrial Disputes Act 1955. (12-3-1955) 1947-ம் வருடத்திய 14-வது மத்தியச் சட்டமாகிய தொழில் தகராறுச் சட்ட ஷரத்துக்கள் இச் சட்டத்தால் பத்திரிகைக்காரர்களுக்கும் பொருந்தும்படி செய்யப்பட்டிருக்கிறது. பத்திரிகைக்காரர்கள் (Working Journalists) என்பது பத்திரிகை உற்பத்தி அல்லது பிரசுரம் சம்பந்தமாகவோ, செய்திகள் சேகரம் செய்வது சம்பந்தமாகவோ உத்தியோகத்திற்கு அமர்த்திக் கொள்ளப்பட்டிருப்பவர்களையும்; ஆசிரியர், தலையங்கம் எழுதுபவர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர், குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றி எழுதுபவர், ரிபோர்ட்டர், நிருபர், சித்திரம் வரைபவர், போட்டோ எடுப்பவர், புரூப் வாசித்துத் திருத்துபவர் இவர்களையும் குறிக்கும். ஆனல் மானேஜ்மெண்ட் அல்லது நிர்வாகம் செய்பவருக்கும்; மேன்பார்வை பார்ப்பதற்காக அமர்த்திக் கொள்ளப்பட்டு நிர்வாக அலுவல்களையும் கவனிப்பவர்களுக்கும் இச்சட்டம் பொருந்தாது.

### 2. இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாடுச் சட்டத் திருத்தம்.

Imports and Exports Control Amendment Act 1955 (16-3-1955)

### 3. ரயில்வேச் செலவு அனுமதிச் சட்டம்.

Appropriation—Railways Act 1955. (19—3—1955) 1955—56 நிதி வருடத்தில் ரயில்வே நிர்வாகத்திற்காக ரூ. 6,53,42,73,000 செலவு செய்யும்படி மத்திய அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 4. ரயில்வேச் செலவு அனுமதி (இரண்டாவது) சட்டம்.

Appropriation Railways No. 2 Act 1955. (19-3-1955) 1954-55 நிதி வருடத்தில் ரயில்வேச் செலவுக்காக இன்னும் ரூ. 12,00,68,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 7. மத்திய அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம்.

Appropriation Act 1955. (19-3-1955) 1954—55 நிதி வருடத்தில் இந்திய அரசாங்கப் பொது செலவுக்காக இன்னும் ரூ. 24,99,87,000 செலவு செய்ய மத்திய அரசாங்கத்திற்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

### 8. மத்திய அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம்.

Appropriation Vote on Account Act 1955. (19-3-1955) 1955-56 நிதி வருடத்தில் இந்திய அரசாங்கப் பொதுச் செலவுக்காக ரூ. 3,23,30,39,000 செலவு செய்ய மத்திய அரசாங்கத்திற்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 9. பார்லிமெண்ட் அங்கத்தினர் சம்பளச் சட்டத் திருத்தம்.

Salaries and Allowances of Members of Parliament, Amendment Act 1955. (29-3-1955) 1954-ம் வருடத்திய சட்டத்தில் பார்லிமெண்ட் அங்கத்தினர்களுடைய பிரயாணப்படி சம்பந்தமான வாசகங்களில் 'இரண்டாம் வகுப்புக் கட்டணம்' என்று இருக்கும் இடங்களில் 'முதல் வகுப்புக் கட்டணம்' என்று வாசகம் திருத்தப்பட்டிருக்கின்றது. ஏற்கனவே ரயில்வேயில் இரண்டாம் வகுப்பாக இருந்ததுதான் இப்போது முதல் வகுப்பு என்று பெயர் மாற்றப் பட்டிருப்பதால் இச்சட்டத் திருத்தம் ஏற்பட்டிருக்கிறது.

### 10. அத்தியாவசியச் சரக்குச் சட்டம்.

Essential Commodities Act 1955. (1-4-1955) சில அத்தியாவசியப் பண்டங்களின் உற்பத்தி சப்ளை வினியோகம் இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சட்டம். இச்சட்டம் விவரமாய் விளக்கப்படும்.

# இந்து விவாகச் சட்டம் (1955)

*[இது இந்திய பார்லிமெண்டால் இயற்றப்பட்ட 1955-ம் வருடத்திய 25-வது மத்திய சட்டம். The Hindu Marriage Act 1955. இச்சட்டமானது 18-5-1955-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று அன்றுமுதல் அமுலுக்கு வந்து விட்டது. கீழே இருப்பது இச்சட்டத்தின் விளக்கமே ஒழிய வார்த்தைக்கு வார்த்தை மொழி பெயர்ப்பு அல்ல.*

*"விசேஷ விவாகச் சட்ட"மும் இச்சட்டமும்:—சமீபத்தில் நமது பார்லிமெண்டு சபையாரால் 1954-ம் வருடத்திய 43-வது மத்தியச் சட்டமாகிய "விசேஷ விவாகச் சட்டம்" (Special Marriage Act 1954) இயற்றப்பட்டது. (1954 "வக்கீல்" இதழ் 11 பார்க்கவும்.) "விசேஷ விவாகச் சட்டம்" என்பதும் அகில இந்தியாவிலும் அமுலில் இருக்கும் சட்டம்தான். ஆனால் அச்சட்டம் எல்லா இந்தியப் பிரஜைகளுக்கும் பொதுவானது. அதாவது இந்துக்களோ, முஸ்லீம்களோ, கிரஸ்தவர்களோ, மதமே இல்லாதவர்களோ, எவரும் இஷ்டப்பட்டால் "விசேஷ விவாக"ச் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம். வெவ்வேறு மதங்களைச் சேர்ந்த மணமகனும் மணமகளும் "விசேஷ விவாகச் சட்ட"ப்படி பதிவுத் திருவணம் செய்து கொள்ளுவது சாத்தியமாகும். "விசேஷ விவாகச் சட்ட"மானது எவரையும் அச்சட்டப்படித்தான் திருமணம் செய்து கொள்ளவேண்டுமென்று வற்புறுத்தவில்லை. ஆனால் விசே[illegible] விவாகச் சட்டப்படி திருமணம் செய்துகொண்டவர்களுக்கும் சரி; ஏற்கனவே தங்கள் தங்கள் மதாசாரப்படி திருமணம்செய்துகொண்டு பிறகு "விசேஷ விவாகச் சட்ட"ப்படி தங்கள் திருமணத்தைப் பதிவு செய்து கொள்ளுபவர்களுக்கும் சரி — அவர்களுடைய திருமணம், விவாக ரத்து முதலிய விஷயங்களெல்லாம் விசேஷ விவாகச் சட்டப்படியே அமுல் நடத்தப்படும்.*

*ஆனால் "இந்து விவாகச் சட்டம்" என்பது இந்துக்களுக்கு மட்டில்தான். (இந்து என்பதில், புத்த மதத்தினர், ஜெயினர்கள், சீக்கியர்கள் இவர்களும் அடங்கியவர்களே.) இனி சென்னை ராஜ்யத்திலும் சரி அகில இந்தியாவிலும் சரி, இந்துக்கள் யாவரும் விசேஷ விவாகச் சட்டப்படி திருமணம் செய்துகொள்ளாவிட்டால் இச் சட்டப்படியேதான் திருமணம் செய்துகொள்ளவேண்டும்; இச்சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக நடக்கும் எந்த இந்துத் திருமணமும் செல்லாது. விவாக ரத்து போன்ற பல விஷயங்களிலும் இந்துக்களை இச்சட்டம் கட்டுப்படுத்தும்.]*

## முகவுரை

இந்து விவாகத்தைப் பற்றிய சட்டத்தைத் தொகுத்தும் திருத்தியும் இயற்றப்பட்டிருக்கும் இச்சட்டத்திற்கு "1955ம் வருடத்திய இந்து விவாகச் சட்டம்" என்று

செக்ஷன் 1 பெயர். காஷ்மீர் நீங்கலாக அகில இந்தியாவிலும் இச்சட்டம் அமுலில் இருக்கும். இந்தியாவுக்கு வெளியே இருக்கும் இந்து இந்தியப் பிரஜைகளுக்கும் இச்சட்டம் உண்டு.

## சென்னை பலதாரத் தடைச் சட்டம் இச்சட்டத்தால் ரத்தாகிவிட்டது.

இச்சட்டத்தின் செக்ஷன் 30ஆல் 1949-ம் வருடத்திய 6-வது சென்னைச் சட்டமாகிய "சென்னை இந்து பலதாரத் தடை - விவாக ரத்துச் சட்டம்" (Madras Hindu Bigamy prevention and Divorce Act 1949) ரத்து செய்யப்பட்டுள்ளது. ஏனென்றால் அவ்விஷயங்களைப்பற்றிய ஷரத்துக்கள் இப்புது அகில இந்தியச் சட்டத்திலேயே இருக்கின்றன.

## இச்சட்டத்தால் கட்டுப்பட்டவர்கள் யார் யார்? இந்துக்கள், பௌத்த மதத்தினர், ஜெயினர்கள், சீக்கியர்களுக்கும் இச்சட்டம் உண்டு.

இச்சட்டம் அடியில் கண்டவர்களைக் கட்டுப்படுத்தும். அவர்களாவன:—

(1) (a) இந்து மதத்தைத் தழுவியவர்கள். வீரசைவர்கள், லிங்காயத்துக்கள், பிரும்ம சமாஜத்தினர், பிரார்த்தனர்கள்,

செக்ஷன் 2 ஆரிய சமாஜத்தினர் உள்பட இந்துமதத்தின் எந்த ரூபத்தையும் வளர்ச்சியையும் பின்பற்றுபவர்களும் இந்துக்களில் சேர்ந்தவர்களே. (b) புத்தமதத்தினர் ஜெயினமதத்தினர் சீக்கி

யர்கள் (c) மேற்கண்டவர்களைத் தவிர, இந்தியவாசிகளாக இருந்து முஸ்லீமாகவோ கிறிஸ்தவராகவோ, பார்சியாகவோ, ஜூ என்ற யூத மதத்தினராகவோ அல்லாத மற்றவர்களுக்கும் இச்சட்டம் உண்டு. ஆனல் இச்சட்டம் ஏற்படாவிட்டால், தங்களுக்கு இச்சட்டத்தில் கண்ட விஷயங்களைப் பொருத்து, இந்துச் சட்டமோ, இந்துச் சட்டத்தின் பகுதியாகக் கருதப்படும் தொன்று தொட்ட பழக்க வழக்கமோ அனுஷ்டானத்தில் இல்லை என்று ருசுப்பிப்பவர்களுக்கு இச் சட்டம் கிடையாது.

## விளக்கம்:—இந்து மதத்தினர் புத்த மதத்தினர், ஜெயின மதத்தினர் சீக்கிய மதத்தினர் என்பவர்கள் யார்?

கீழே கண்டவர்கள்தான் முறையே இந்துக்கள் புத்தமதத்தினர், ஜெயினர்கள் அல்லது சீக்கியர்கள் எனப்படுவார்கள். அவர்களாவன:- (a) தாய் தகப்பன் இருவரும் இந்துக்களாகவோ, புத்தமதத்தினராகவோ, ஜெயின மதத்தினராகவோ, சீக்கியமதத்தினராகவோ இருந்து (அவர்கள் சட்ட பூர்வமாகத் திருமணம் செய்துகொண்டவர்களாக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள்; (b) தாய்தகப்பன் இருவர்களில் ஒருவர் மட்டில் இந்துவாகவோ, புத்தமதத்தினராகவோ, ஜெயினராகவோ, சீக்கியராகவோ இருந்து அவர்களுக்குப் பிறந்து அவ்விதப் பெற்றோரின் குடும்பம் அல்லது சமூகத்தைச் சேர்ந்த அங்கத்தினராக வளர்க்கப்பட்ட குழந்தைகள்; (c) மதமாற்றத்தால் இந்து மதத்தையோ, புத்த மதத்தையோ, ஜெயின மதத்தையோ சீக்கியமதத்தையோ தழுவியவர்கள்; முதலில் இம்மதத்தினராக இருந்து வேறு மதத்திற்குப் போய், மறுபடியும் மதம் மாற்றி மேலே கண்ட மதங்களைத் தழுவியவர்கள்.

(2) மேலே கண்ட விதிகள் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 366 (25) என்ற ஷரத்தின்படி ஷிட்யூல் வகுப்பினர் என்ற மலை ஜாதியினருக்குக் கிடையாது. ஆனல் அவர்களுக்கும் இதே விதிகள் உண்டென்று உத்தரவு பிறப்பிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு.

(3) இச்சட்டத்தில் "இந்து" என்று சொல்லப்படும்போது, இச்சட்டம் யார் யாருக்கு உண்டு என்று இந்த செக்ஷனில் மேலே குறிப்பிடப்பட்டிருக்கிறதோ அவர்கள் இந்து மதத்தைத் தழுவியவர்களல்லாவிட்டாலும் அவர்களையும் குறிக்கும்.

187739

## சில சொற்களின் பொருள்

செக்ஷன் 3

இச்சட்டத்தில், சில சந்தர்ப்பங்களில் வேறு விதமாக அர்த்தம் செய்யவேண்டியதாக சொல்லியிருந்தாலொழிய, கீழே குறிப்பிடப்படும் சில வார்த்தைகளுக்கு பின் வருமாறு அர்த்தம்செய்து கொள்ள வேணடும். அவை யாவன:—

### "வழக்கம்" (மாமூல்) அல்லது "ஆசாரம்"

(a) ஒரு பிரதேசத்திலுள்ள இந்துக்களிடையேயோ, அல்லது இந்துக்களாகிய ஒரு வகுப்பு அல்லது ஒரு இனத்தைச் சேர்ந்தவரிடையோ; அல்லது ஒரு இந்துக் கூட்டம் அல்லது குடும்பத்திலோ தொன்றுதொட்டகாலமாகத் தொடர்ச்சியாகவும் ஒரே விதமாகவும் ஒரு விதி அனுஷ்டிக்கப்பட்டு வந்த காரணத்தினுல், அதுவே சட்டமாகப் பாவிக்கப்பட்டு வந்தால் அதைத்தான் "வழக்கம்" (மாமூல்) அல்லது "ஆசாரம்" என்று சொல்லப்படும். ஆனல் அவ்வித விதியானது நிச்சயமானதாக இருக்கவேணடும்; நியாயமற்றதாகவும், பொது நன்மைக்கு முரணகவும் இருக்கக் கூடாது. மேலும் ஒரு குடும்பத்திற்குமட்டில் பிரயோகிக்கத்தக்க விதியாக இருந்தால் அது அக்குடும்பத்தினரால் கைவிடப்படாமல் இருந்திருக்கவேண்டும்.

### "ஜில்லா கோர்ட்டு"

(b) இச்சட்டத்தில் "ஜில்லா கோர்ட்டு" என்று சொல்லப்படுவது சிடிசிவில் கோர்ட்டு இருக்கும் இடங்களில் அக்கோர்ட்டையும்; மற்ற இடங்களில் அசல் வியாஜ்யங்களை விசாரிக்க அதிகாரமுள்ள பிரதான கோர்ட்டையும்; குறிக்கும். மேலும், இச்சட்டத்தில் கண்ட விஷயங்களை விசாரணை செய்ய வேறு சிவில் கோர்ட்டுகளுக்கும் கெஜட் அறிக்கை மூலம் அதிகாரம் கொடுக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

### "முழு ரத்தக்கலப்பு" (Fnll Blood) "பாதி ரத்தக் கலப்பு" (Half Blood)

செக்ஷன் 3 (c)

இரண்டு நபர்கள் ஒரு பொதுவான மூதாதையின் ஒரேமனைவி மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களாக இருந்தால் அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு முழுரத்தக் கலப்புள்ள உறவினர் எனப்படுவர். பொதுவான ஒரு மூதாதையின் வெவ்வேறு மனைவியர்

மூலமாய் ஏற்பட்ட சந்ததிகளில் தோன்றியவர்களாயிருந்தால், பாதி ரத்தக் கலப்புள்ள உறவினர் என்று சொல்லப்படுவார்.

### "உதரக் கலப்பு" (Uterine Blood)

இரண்டு நபர்கள் ஒரு பொதுவான பெண் மூதாதையின் வெவ்வேறு கணவர்கள் மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தொன்றியவர்களாக இருந்தால், அவர்களில் ஒருவர் மற்றொருவருக்கு உதரக் கலப்புள்ள உனவினர் எனப்படுவார்.

செக்ஷன் 2 (d)

விளக்கம்: மேலே 'மூதாதை' என்று சொல்லப்படுவதில் தகப்பன் சேர்ந்தவரே. 'பெண் மூதாதை' என்பதில் தாய் சேர்ந்தவளே.

உதாரணமாக: ஒருதகப்பனுக்கு ஒரே மனைவி மூலம் பிறக்கும் இரண்டு மகன்களும் ஒருவருக்கொருவர் 'முழு ரத்தக் கலப்பு' உள்ளவர்கள். அத்தகப்பனுக்கு மூத்த மனைவி மூலம் பிறந்த மகனும் இரண்டாவது மனைவி மூலம் பிறந்த மகனும் ஒருவருக்கொருவர் 'பாதி ரத்தக் கலப்பு' உள்ளவர்கள். ஒரே தாய்க்கு முதல் கணவன் மூலம் பிறந்த மகனும், இரண்டாவது கணவன் மூலம் பிறந்த மகனும் ஒருவருக்கொருவர் 'உதரக் கலப்பு' உள்ளவர்கள.

### 'சபிண்டா' உறவுமுறை

(இரண்டு நபர்கள் ஒருவருக்கொருவர் 'சபிண்டா' உறவுமுறை உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் திருமணம் செய்துகொள்ளக் கூடாதென்று இருக்கிறது. இவ்விதிக்கு விதி விலக்குகள் இருக்கின்றன.) 'சபிண்டா' உறவு முறை என்பது தாய் வழியாக மேல் நோக்கி மூன்று தலைமுறைகள் வரையிலும் தகப்பன் வழியாக மேல் நோக்கி ஐந்து தலை முறைகள் வரையிலும் நீடிக்கின்றது. ஒருவர் மற்றவருக்கு மேற்கண்டபடியான ஒரு மூதாதையாக (lineal ascendant) இருந்தாலும் சரி; அல்லது இருவருக்கும் பொதுவாக ஒரு மூதாதை இருந்து அம் மூதாதையானவர் ஒவ்வொருவருக்கும் மேற்கண்டபடி தாய்வழியாக மூன்று தலைமுறைக்குள்ளோ, அல்லது தகப்பன் வழியாக ஐந்து தலை முறைக்குள்ளோ இருந்தாலும் சரி அவ்விருவர்களும் 'சபிண்டா'க்களாவார்கள். தலைமுறைகளின் எண்ணிக்கை கணக்குச் செய்வதில் யாருக்கு உறவுமுறை கண்டுபிடிக்க வேண்டுமோ அவரை முதல் தலைமுறையாக வைத்துக் கணக்குச் செய்யவேண்டும்.

உதாரணமாக: ஒரு ஆண் நபரின் தாய் மாமனின் மகள் அவருக்கு 'சபிண்டா' ஆவாள். ஆண் முதல் தலைமுறை. அவருடைய தாய் இரண்டாவது தலைமுறை. அத்தாயின் தகப்பன் மூன்றாவது தலைமுறை. இருவருக்கும் பொதுவான மூதாதையாகிய பாட்டன் ஆண் நபருக்குத் தாய் மூலம் மூன்று தலைமுறைக்குள் இருப்பதால், இருவரும் 'சபிண்டா'க்களாவார்கள்.

### தடுக்கப்பட்ட உறவுமுறைகள்

இரண்டு நபர்கள் ஒருவாக்கொருவர் அடியில் கண்ட உறவு முறைகள் உள்ளவர்களாக இருந்தால் அவர்கள் இருவரும் "தடுக்கப்பட்ட உறவு முறை" க்குள் (withinthe degrees of prohibited relation ship) இருப்பவர்களாவார்கள். அதாவது:— (i) ஒருவர் மற்றவரின் மூதாதையாக இருந்தாலும் (ii) ஒருவர் மற்றவருடைய மூதாதையின் மனைவியாகவோ, கணவனாகவோ இருந்தாலும் அல்லது சந்ததியின் மனைவியாகவோ கணவனாகவோ, இருந்தாலும், (iii) ஒருவர் மற்றவருடைய சகோதரர்; தகப்பனுடைய அல்லது தாயின் சகோதரர்; பாட்டன் அல்லது பாட்டியின் சகோதரர்— இவர்களில் எவருடைய மனைவியாக இருந்தாலும் (iv) இருவரும் சகோதர சகோதரிகளாகவோ (brother and sister) மாமன் மருமகளாகவோ, (uncle and niece); அத்தை மருமகனாகவோ (aunt and nephew); அல்லது சகோதர சகோதரிகளின் மக்களாகவோ; அல்லது இரண்டு சகோதரர்களின் மக்களாகவோ; அல்லது இரண்டு சகோதரிகளின் மக்களாகவோ இருந்தாலும்- இருவரும் ஒருவருக்கொருவர் தடுக்கப்பட்ட உறவு முறைக்குள் இருப்பவராவார்கள்.

செக்ஷன் 3 (g)

மேலேகண்டபடி 'சபிண்டா' உறவு முறை என்பதும் 'தடுக்கப்பட்ட உறவு முறை' என்பதும் முழு ரத்தக் கலப்புள்ளவர்களிடையே எப்படியோ அப்படியேதான் பாதி ரத்தக் கலப்புள்ளவர்களிடையேயும், உதரக் கலப்பு உள்ளவர்களிடையேயும் பார்க்கவேண்டும். மேலும் திருமணம் செய்துகொண்டவர்களுக்குப் பிறக்கும் மக்களைப் போலவேதான் திருமணம் செய்து கொள்ளாதவர்களுக்குப் பிறக்கும் மக்களுடைய (illegitimate) உறவு முறையும்; அதைப் போலவே ரத்தக் கலப்பால் ஏற்பட்ட உறவு முறையைப் போலவேதான் சுவீகாரத் ஏற்பட்ட உறவு முறையும் பார்க்கப்பட வேண்டும்.

## இதே விஷயத்தைப் பொருத்த வேறு சட்டங்கள் எல்லாம் இச் சட்டத்தால் ரத்தாகின்றன.

இச்சட்டத்தில் வியக்தமாக வேறு விதமாகக் குறிப்பிடப்பட்டிருந்தா லொழிய:—

செக்ஷன் 4

(a) இச்சட்டத்தில் கண்டிருக்கும் அதே விஷயங்களைப் பொருத்து, இச்சட்டம் வருவதற்கு முன்னதாக அமுலில் இருந்த இந்துச்சட்டம் பற்றிய தர்மசாஸ்திர வாக்கியங்களும்; விளக்கங்களும், சட்டமாக பாவிக்கப்பட்ட பழக்க வழக்கங்களும் ஆசாரணைகளும் ரததாகி விட்டன. (b) இச்சட்டம் வரும் போது, இச்சட்டத்தில் கண்ட அதே விஷயங்களைப் பொருத்து அமுலில் இருந்த வேறு சட்டங்களின் ஷரத்துக்கள், இச்சட்டத்திற்கு முரணாக இருந்தால் அவையும் இச்சட்டத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளன.

## இந்து விவாகங்கள். இந்துத் திருமணம் செய்துகொள்ளுவதற்கான நிபந்தனைகள்

கீழே கண்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டால், எந்த இரண்டு இந்துக்களும் தங்களைக் கணவன் — மனைவியாகத் திருமணம் செய்து கொள்ளலாம்.

செக்ஷன் 5

நிபந்தனைகளாவன:—(1) திருமணம் செய்துகொள்ளும் சமயத்தில் மணமகனுக்கு உயிருடன் உள்ள வேறு மனைவி இருக்கக் கூடாது; அதைப்போலவே மணமகளுக்கும் உயிருடன் உள்ள வேறு கணவன் இருக்கக் கூடாது.

(2) திருமண காலத்தில் தம்பதிகளில் எவரும் மேதை (idiot) யாகவோ பைத்தியமாகவோ (Lunatic) இருக்கக் கூடாது.

(3) திருமண சமயத்தில் மணமகனுக்கு 18 வயது பூர்த்தியாகியும், மணமகளுக்கு 15 வயது பூர்த்தியாகியும் இருக்கவேணடும்.

(4) தம்பதிகள் ஒருவருக்கொருவர் தடுக்கப்பட்ட உறவு முறை உள்ளவர்களாக இருக்கக் கூடாது. ஆனல் தொன்றுதொட்ட பழக்க வழக்கப்படிக்கோ, ஆசாரணைபடிக்கோ அத்தம்பதிகள் இருவரும் திருமணம் செய்து கொள்ளுவது அனுமதிக்கப் பட்டிருந்தால், (அவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறை உள்ளவர்களாக இருந்தாலும்) அவர்கள் திருமணம் செய்து கொள்ளலாம்.

(5) தம்பதிகள் ஒருவருக் கொருவர் 'சபிண்டா' உறவு முறை உள்ளவர்களாகவும் இருக்கக் கூடாது. இது விஷயத்திலும் தொன்றுதொட்ட பழக்க வழக்கங்களின் படிக்கோ ஆசாரணைகளின்படிக்கோ அத்தம்பதிகள் திருமணம் செய்துகொள்ளுவது அனுமதிக்கப்பட்டிருந்தால் மட்டில் அவர்கள் 'சபிண்டா'வாக இருந்தாலும் திருமணம் செய்துகொள்ளலாம்.

(6) மணமகளுக்கு 18 வயது பூர்த்தியாகாதிருந்து, அவளுடைய திருமணத்திற்குச் சம்மதம் கொடுக்கக்கூடிய கார்டியன் ஒருவர் இருந்தால் அத்திருமணத்திற்கு அக்கார்டியனுடைய அனுமதிவேண்டும்.

## திருமணத்திற்கு சம்மதம் கொடுக்கக் கூடிய கார்டியன்கள்.

இச் சட்டப்படி மணமகளுக்குக் கார்டியனுடைய சம்மதம் அவசியமாக இருந்தால், கீழே கண்டவர்கள் தான்,

செக்ஷன் 6 (1)

முறையே (அதாவது முன்னல் குறிப்பிடப்பட்டவர் இல்லாவிட்டால் அடுத்தபடியாகக் குறிப்பிடப்பட்டவர்) அவ்விதச் சம்மதத்தைக் கொடுக்க உரிமையுள்ளவராவார்கள். அவர்களாவன:—

(1) தகப்பன் (2) தாய் (3) தகப்பனுடைய தகப்பன் (4) தகப்பனுடைய தாய் (5) ஒரே வயிற்றில் பிறந்த சகோதரர் (பல சகோதரர்கள் இருந்தால் மூத்தவர்.) (6) ஒரே தகப்பனுக்கு வேறு மனைவி மூலம் பிறந்த சகோதரர் (பல சகோதரர்கள் இருந்தால் மூத்தவர்.) ஆனல் மணமகள் அவ்வித சகோதரருடன் வசித்து வந்தும் அவரால் போஷிக்கப்பட்டும் வந்திருந்தால்தான் அவருக்குச் சம்மதம் கொடுக்க உரிமை ஏற்படும். (7) தகப்பனுடைய சகோதரர் (பலர் இருந்தால் மூத்தவர்.) (8) தகப்பனுடைய 'பின்னேதர' சகோதரர்; அதாவது தகப்பனுடைய தகப்பனுக்கு வேறு மனைவி மூலம் பிறந்த சகோதரர் (பலர் இருந்தால் மூத்தவர்.) ஆனல் இவ்வித சிற்றப்பன் அல்லது பெரியப்பனுடன் மணமகள் வசித்து வந்தும், அவரால் போஷிக்கப்பட்டும் வந்திருந்தால்தான் அவருக்குச் சம்மதம் கொடுக்க உரிமை ஏற்படும். (9) தாயின் தகப்பன். (10) தாயின் தாய் (11) தாயின் சகோதரர். தாயாரும் அச்சகோதரரும் ஒரே தாய் வயிற்றில் பிறந்த சகோதரராக இருக்கவேண்டும். (அவ்விதம் பலர் இருந்தால் மூத்தவர்.) மேலும் அவருடன் மணமகள் வசித்து வந்தும் அவரால் போஷிக்கப்படுபவளாகவும் இருக்கவேண்டும்.

## கார்டியனுக்கும் 21 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

செக்ஷன் 6 (2)

மேலே கண்டிருப்பவர் எவருக்கும் 21 வயது பூர்த்தியாகாதிருந்தால், மணமகளின் கார்டியன் முறையில் திருமணத்திற்குச் சம்மதம் கொடுக்க அவருக்கு உரிமை இல்லை. (அதாவது, 18 வயது பூர்த்தியாகாதிருக்கும் மணமகளுக்கு மேலே கண்டவர்கள்தான் திருமண சம்மதம் கொடுக்கக் கூடிய கார்டியன்களாவார்கள். முன் சொல்லப்பட்ட கார்டியன் இல்லாவிட்டால்தான் அடுத்தபடியாக சொல்லப்பட்டிருப்பவருக்கு உரிமை ஏற்படும். மேலும் முன் சொல்லப்பட்ட கார்டியனுக்கே 21 வயது பூர்த்தியாகாவிட்டால் அவர் சம்மதம் கொடுக்க முடியாது; அடுத்தபடியாக 21 வயது பூர்த்தியாகி இருக்கும் கார்டியன்தான் சம்மதம் கொடுக்க வேண்டும்.)

## கார்டியன் சம்மதம் கொடுக்க மறுத்தாலும், தகுதியற்றவராக இருந்தாலும்.

செக்ஷன் 6 (3)

மேலே கண்ட ஷரத்துக்களின்படி மணமகளின் திருமணத்திற்குச் சம்மதம் கொடுக்க உரிமையுள்ள கார்டியனுனவர், தம்முடைய சம்மதத்தைக் கொடுக்க மறுத்தாலும் சரி; அல்லது எக்காரணத்தாலோ அவர் கார்டியனுக இருக்க முடியாமலோ, தகுதியற்றவராகவோ இருந்தாலும் சரி; மேலே கண்ட வரிசைக் கிரமத்தில் அவருக்கு அடுத்தபடியாக இருப்பவர் மணமகளுடைய திருமண கார்டியனுக இருந்து தம்முடைய சம்மதத்தைக் கொடுக்க உரிமையுள்ளவராவார்.

## மேலே கண்ட கார்டியன்கள் ஒருவருமே இல்லாவிட்டால்.

செக்ஷன் 6 (4)

மேலே செக்ஷன் 6 (1)ல் வரிசையாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் கார்டியன்கள் ஒருவருமே இல்லாவிட்டால், இச் சட்டப்படித் திருமணம்செய்து கொள்ள மணமகளுக்குக் கார்டியன் சம்மதமே தேவையில்லை.

## திருமணத்தைத் தடுக்க கோர்ட்டின் அதிகாரம்.

செக்ஷன் 6 (5)

இச்சட்ட ஷரத்துக்கள் எப்படி இருந்தபோதிலும், 18 வயது பூர்த்தியாகாத மணமகளின் நன்மையைக் கருதி, அவளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் திருமணத்தைத் தடுத்து விடுவது அவசியமெனத் தோன்றினல், தடை உத்தரவு மூலம் அத்திருமணத்தைத் தடுத்துவிடக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## இந்துத் திருமணம் செய்யப்பட வேண்டிய முறை.

செக்ஷன் 7

(1) திருமண தம்பதிகள் இருவரில் எவருடைய தோன்றுதொட்ட பழக்க வழக்கப்படிக்கான ஆசரணைகளின்படிக்கும் சடங்குகளுடனும் இந்துத் திருமணம்செய்து கொள்ளப்படலாம்.

(2) அவ்வித சடங்குகளில், மணமகனும் மணமகளும் சேர்ந்து புனிதமான அக்கினிக்கு முன்பாக ஏழு அடிகள் எடுத்து வைக்கவேண்டுமென்ற 'சப்தபதி' என்ற சடங்கு செய்யப்பட வேண்டுமானல், சப்தபதியில் ஏழாவது அடி எடுத்து வைப்பதுடன் திருமணம் பூர்த்தியானதாகும்.

## இந்துத் திருமணங்களைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்து கொள்ளுவது பற்றி.

செக்ஷன் 8 (1)

இந்துத் திருமணங்கள் பற்றிய ருசுவை எளிதாக்கும் பொருட்டு, ராஜ்ய சர்க்கார் விதிகள் இயற்றலாம். அதாவது திருமணம் செய்துகொள்ளும் தம்பதிகள் 'இந்து விவாக ரிஜிஸ்டர்' என்ற புத்தகத்தில், தங்களுடைய திருமணம்பற்றிய விவரங்களைப் பதிவு செய்து கொள்ள இவ்விதிகள் வசதியளிக்கும். எவ்விதம், எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அவ்விதம் பதிவுசெய்து கொள்ளலாமென்பதும் விதிகளால் குறிப்பிடப்படும்.

## பதிவுசெய்து கொள்ளுவதைக் கட்டாயப்படுத்தலாம்.

செக்ஷன் 8 (2)

மேலே செக்ஷன் 8 (1)ல் கண்டிருப்பது எப்படி இருந்தபோதிலும், ஒரு ராஜ்யத்திலோ அல்லது அதன் பாகத்திலோ இந்துத் திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ள வேண்டியது அவசியமென்றே, யுக்தமென்றே ராஜ்ய சர்க்காருக்

குத் தோன்றினால் அவ்விதம் கட்டளை பிறப்பிக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு. எல்லாத் திருமணங்களையும் கட்டாயமாகப் பதிவுசெய்து கொள்ளவேண்டுமென்றோ, அல்லது குறிப்பிட்ட வகைத் திருமணக்களை மட்டில் கட்டாயமாகப் பதிவுசெய்து கொள்ள வேண்டுமென்றோ உத்தரவிட ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. அவ்விதம் கட்டளை பிறப்பிக்கப்பட்ட பிறகு அதற்காக ஏற்படும் விதிகளுக்கு முரணாக நடப்பது குற்றமாகும். அக்குற்றத்திற்கு ரூ. 25 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

(3) மேலே கண்ட ஷரத்துக்களின்படி ஏற்படும் விதிகள் அவை இயற்றப்பட்டவுடன் அந்தந்த ராஜ்ய சட்ட சபையார் முன்பு சமர்ப்பிக்கப்படும்.

(4) 'இந்து விவாக ரிஜிஸ்டர்' என்ற புத்தகத்தை நியாயமான சமயங்களில் யாரும் பார்வையிடலாம்; அந்த ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்பட்டுள்ள விஷயங்களுக்கு நகல் மனுப் போட்டு, நகல் வாங்கிக் கொள்ளலாம். நகல் வாங்கக் கட்டணம் எவ்வளவு என்பதைப் பற்றி விதிகள் ஏற்படும். அதை விவாக ரிஜிஸ்ட்ராரிடம் செலுத்தி நகல் வாங்க வேண்டும். விவாக ரிஜிஸ்டரில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களை ருசுப்பிக்க, விவாக ரிஜிஸ்டர் ஒரு ருசுவாக ஏற்றுக்கொள்ளப்படும்.

## பதிவு செய்யப்படாவிட்டாலும் இந்துத் திருமணம் செல்லுபடியுள்ளதே,

**செக்ஷன் 8 (5)**

இந்த செக்ஷனில் கண்டிருப்பது எப்படி இருந்த போதிலும், பதிவு செய்து கொள்ளப் படாத காரணத்தினால் எந்த இந்துத் திருமணமும் செல்லுபடியாகாமல் போகாது. அதாவது, மேலே கண்ட ஷரத்துக்களின் படி ஒரு இந்துத் திருமணத்தைப் பற்றிய விவரங்கள் இந்து விவாக ரிஜிஸ்டரில் பதிவு செய்யப்படாமல் போய் விட்டாலும், அத்திருமணம் செல்லுமா செல்லாதா என்ற விஷயத்தை அது எவ்விதத்திலும் பாதிக்காது.

## தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடைவது பற்றி

(Restitution of Conjugal Rights)

**செக்ஷன் 9**

(1) தகுந்த காரணமில்லாமல் மனைவி கணவனுடன் தாம்பத்திய வாழ்க்கை நடத்தாமல் விலகிக்கொண்டிருந்தால், தாம்பத்திய வாழ்க்கையைத் திரும்ப அடைய வேண்டுமென்று கணவன் மனுப் போடலாம். அதைப் போலவே கணவனானவர் மனைவியுடன் தாம்பத்திய வாழ்க்கை வாழாமல் விலகி இருந்தாலும், மனைவியானவள் தாம்பத்திய வாழ்வைத் திரும்ப அடைவதற்காக மனுப் போடலாம். இம் மனு ஜில்லா கோர்ட்டில் போடப்பட வேண்டும். ஜில்லா ஜட்ஜானவர் மனுவில் கண்டிருக்கும் விஷயங்கள் உண்மையா என்று விசாரணை செய்து, சட்ட பூர்வமான தடை ஒன்றுமில்லா விட்டால், அத்தம்பதிகள் திரும்பவும் தாம்பத்திய வாழ்க்கை நடத்தவேண்டுமென்று தீர்புச் செய்யலாம்.

(2) தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடைய வேண்டுமென்று கணவனோ மனைவியோ மனுப் போட்டால், எதிர்க்கட்சிக்காரர் சில குறிப்பிட்ட காரணங்களைக்காட்டித்தான் அம்மனுவை ஆட்சேபிக்க முடியும். அதாவது தம்பதிகள் பிரிந்து வசித்து வர வேண்டுமென்று கோர்ட் உத்தரவு வாங்கவோ (Judicial separation) அல்லது திருமணமே செல்லாதென ஸ்தாபிக்கவோ, (Nullity of Marriage) அல்லது விவாகரத்து செய்து கொள்ளவோ (Divorce) எந்த எந்தக் காரணங்கள் இருக்கவேண்டுமோ, அதே காரணங்களைக் கொண்டுதான் இவ்வித மனுக்களையும் எதிர்க்க முடியும். (அவ்விதக் காரணங்கள் ஒன்றுமில்லா விட்டால், தாம்பத்திய உரிமைகளைத் திரும்ப அடையவேண்டுமென தீர்ப்பு ஏற்படும். அக்காரணங்கள் எவை என்று கீழே அந்தந்தத் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.)

## தம்பதிகள் பிரிந்து வசித்து வர கோர்ட்டு உத்தரவு

(Jndicial Separation)

**செக்ஷன் 10**

(1) கீழே கண்ட காரணங்களில் எது இருந்தாலும், தம்பதிகளில் எவரும் மற்றவர் மீது ஜில்லா கோர்ட்டுக்கு மனுக் கொடுத்து, எதிர் மனுதாரும் தாமும் பிரிந்து வசித்துவர உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்கலாம். இச்சட்டம் வருவதற்கு முன்பு திருமணம் ஆனவர்களும் சரி, இச்சட்டம் வந்த பிறகு திருமணமானவர்களும் சரி இவ்வித மனுக் கொடுக்க உரிமை உள்ளவர்கள். இவ்வித மனுக்கொடுப்பதற்கான காரணங்களாவன:—

(1) மனுக் கொடுப்பதற்கு முன் குறைந்தது இரண்டு வருடங்கள் தொடர்ச்சியாக எதிர் மனுதார் மனுதாரைக் கைவிட்டுப் போய்

விட்டாலும் சரி. (desertion); அதாவது நியாயமான காரணமில்லாமலும், மனுதாருடைய சம்மத மில்லாமலோ அல்லது மனுதாரின் விருப்பத்திற்கு முரணாகவோ எதிர்மனுதார், மனுதாரைக் கைவிட்டுப் போயிருக்க வேண்டும்; அல்லது எதிர் மனுதார் வேண்டுமென்றே மனுதாரை அனாதரவு (wilful neglect) செய்திருக்க வேண்டும். (2) எதிர் மனுதாருடன் சேர்ந்து வசிப்பது தமக்குத் தீங்கு அல்லது கெடுதி விளைவிக்கக் கூடியதென்று மனுதாரின் மனதில் நியாயமான ஒரு பயம் ஏற்படும்விதம் எதிர் மனுதாரனவர் மனுதாரைக் குரூரமாக நடத்தி வந்தாலும் சரி; (3) மனுக் கொடுப்பதற்கு முன் குறைந்தது ஒரு வருடகாலமாக எதிர் மனுதார் கடுமையான குஷ்டரோகத்தால் (Virulent form of Leprosy) பீடிக்கப்பட் டிருந்தாலும் சரி; (4) மனுக் கொடுப்பதற்கு முன் எதிர் மனுதார் மேக ரோகத்தால் (Venereal disease) பீடிக்கப்பட்டிருந்தாலும் சரி; (ஆனால் அவ் வியாதியானது பிறருக்குப் பரவக்கூடிய நிலைமையில் இருக்கவேண்டும்; தவிர அது மனுதாரிடமிருந்து எதிர் மனுதாருக்குப் பரவியதாக இருக்கக் கூடாது.) (5) மனுக் கொடுப்பதற்கு முன் தொடர்ச்சியாகக் குறைந்தது இரண்டு வருடங்களாக எதிர் மனுதார் சித்த சுவாதீனமில்லாமல் இருந்தாலும் சரி (Unsound mind) (6) திருமணத்திற்குப் பிறகு எதிர் மனுதார் வேற்று நபருடன் புணர்ச்சி செய்திருந்தாலும் சரி (Sexual indercourse) மேலே கண்ட 6 காரணங்களில் ஏதாவது ஒரு காரணமாவது இருந்தால்தான் முன் சொன்னப்படி மனுப் போடலாம்.

(2) இவ்வித மனுவின் பேரில், தம்பதிகள் பிரிந்து வசித்துவரவேண்டுமென்று கோர்ட்டுத் தீர்ப்பு ஏற்பட்டால் மனுதார், எதிர் மனுதாருடன் சேர்ந்து வாசிக்க வேண்டுமென்ற கடமை போய்விடும். ஆனால் தம்பதிகளில் எவரும் அத்தீர்ப்பை ரத்து செய்ய வேண்டுமென்று மனுப்போடலாம். மனுவில் கண்ட சங்கதிகள் உண்மையாக இருந்து, அப்படிச் செய்வது சரி என்றும் நியாயமென்றும் கோர்ட்டுக்குத் தோன்றினால் தம்பதிகள் பிரிந்து வசிக்க வேண்டுமென்று ஏற்பட்ட தீர்ப்பை ரத்து செய்து விடவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## செல்லாத திருமணங்கள்

கீழே கண்ட 3 வகைத் திருமணங்கள் செல்லவே செல்லா (Void Marriages) அவையாவன:—(1) மணமகனுக்கு
செக்ஷன் 11 மனைவி உயிருடன் இருக்கும் போதே அவர் செய்து கொள்ளும் திருமணம்; அதைப் போலவே மணமகளுக்குக் கணவன் இருக்கும் போதே அவள் செய்து கொள்ளும் திருமணம் அதாவது செக்ஷன் 5 (i) ஷரத்துக்கு முரணாகச் செய்து கொள்ளப்படும் திருமணங்கள் (2) தொன்று தொட்ட பழக்க வழக்கங்களின் படிக்கோ அல்லது ஆசரணைப் படிக்கோ அனுமதிக்கப் பட்டிருந்தாலொழிய, தடுக்கப்பட்ட உறவு முறை உள்ளவர்கள் செய்து கொள்ளும் திருமணங்கள். அதாவது செக்ஷன் 5 (4) ஷரத்துக்கு முரணாக நடக்கும் திருமணங்கள் (3) தொன்று தொட்ட பழக்க வழக்கங்களின் படிக்கோ அல்லது ஆசரணைப் படிக்கோ அனுமதிக்கப் பட்டிருந்தாலொழிய, மணமகனும் மணமகளும் 'சபிண்டர்'களாக இருக்கும் போதே அவர்கள் செய்துகொள்ளும் திருமணங்கள். அதாவது செக்ஷன் 5 (5) ஷரத்துக்கு முரணாக நடக்கும் திருமணங்கள். இவ்விதத் திருமணம் செல்லாதென தம்பதிகளில் எவரும் கோர்ட்டுக்கு மனுப்போட்டுக் கோர்ட்டு மூலம் ஊர்ஜிதத் தீர்ப்பும் (declaration by a decree of nullity) பெற்றுக் கொள்ளலாம்.

## தம்பதிகளில் ஒருவரின் இஷ்டத்தின் பேரில் ரத்து செய்து கொள்ளக் கூடிய திருமணங்கள் (Voidable Marriages)

(1) கீழே கண்ட காரணங்களினால் தம்பதிகளில் எவரும் தம்முடைய திருமணத்தைச் செல்லாதெனச் செய்து கொள்ள
செக்ஷன் 12 லாம். இச் சட்டத்திற்கு முன் திருமணமானவர்களும் சரி இச் சட்டம் வந்த பிறகு திருமணமானவர்களும் சரி இம் மனுப் போடலாம். இதற்காகக் கோர்ட்டில் மனுப் போட்டால் அவ்விதத் திருமணம் செல்லாதென கோர்ட்டுத் தீர்ப்பு ஏற்படும். அக்காரணங்களாவன:-- (a) திருமண காலத்தில் எதிர் மனுதார் நபும்சகராக இருந்து (Impotent) மனுப் போடும் வரையில் தொடர்ச்சியாக அவ்விதமே இருந்தாலும் (b) திருமண காலத்தில் எதிர்மனுதார் பேதையாகவோ பைத்தியமாகவோ இருந்திருந்தாலும் (c) திருமணம் செய்து கொள்ளுவதற்கு மனுதாருடைய சம்மதமோ, (அல்லது மனுதாருடைய திருமணத்திற்கு செக்ஷன் 5ல் கண்டபடி கார்டியனின் சம்மதம் அவசியமாக இருந்தால் அக் கார்டியனுடைய சம்மதமோ) பலாத்காரமாகவோ, அல்லது மோசடியாகவோ, வாங்கப்பட்டிருந்தாலும் (d) திரு

மண காலத்தில் எதிர் மனுதார் (மனைவியானவள்) மனுதாரல்லாத வேறு ஒருவர் மூலம் கர்பமாக இருந்தாலும்—திருமணம் செல்லாதென மனுதார் கோர்ட்டில் மனுப் போடலாம். (2) (a) ஆனால் மனுதாருடைய சம்மதம் அல்லது கார்டியனுடைய சம்மதமானது பலாத்காரத்தினாலோ, மோசடியாகவோ வாங்கப்பட்ட காரணத்தினால், திருமணம் செல்லாதென அதை ரத்துச் செய்ய வேண்டு மென்று போடப்படும் மனுவானது ஒரு வருடத்திற்குள் போடப் பட வேண்டும். அதற்குப் பிறகு போடப்படும் மனு ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. அதாவது எவ்வித பலாத்காரத்தால் சம்மதம் வாங்கப்பட்டதோ அப்பலாத்காரம் மறைந்து போன ஒரு வருடத்திற்குள்ளும்; அல்லது மோசடியாக சம்மதம் வாங்கப்பட்ட விஷயம் கண்டு பிடிக்கப்பட்ட காலத்திலிருந்து ஒரு வருடத்திற்குள்ளும் மனுப் போடப்பட வேண்டும். மேலே கண்ட பலாத்காரமானது மறைந்து போன பிறகோ, அல்லது மோசடியானது கண்டு பிடிக்கப்பட்ட பிறகோ, மனுதார் எதிர் மனுதாருடன் பூர்ண சம்மதத்தின் பேரில் புருடன் மனைவியாக வசித்திருந்தாலும், மேலே கண்டபடி திருமண ரத்துக்காக மனுப் போடமுடியாது. (b) மனைவியானவள் திருமண காலத்தில் வேறு ஒருவர் மூலம் கருத் தருத்திருந்த காரணத்தினால் திருமணத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கணவன் மனுப் போட்டால்—மனுப் போடும் கணவனுக்கு திருமண சமயத்தில் அது விஷயம் தெரியாமல் இருந்திருக்கவேண்டும். மேலும் இச் சட்டம் வருவதற்கு முன் ஏற்பட்ட அவ்விதத் திருமணத்தை ரத்து செய்ய சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளும்; இச் சட்டம் வந்த பிறகு ஏற்படும் அவ்விதத் திருமணத்தை ரத்துசெய்யத் திருமணத் தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள்ளும் மனுப்போட வேண்டும். மேலும், திருமண காலத்திலேயே மனைவியானவள் வேறு ஒருவர் மூலம் கர்ப்பமாகி இருக்கும் விஷயம் கணவனுக்குத் தெரிந்த பிறகும், கணவன் சம்மதித்து மனைவியுடன் புணர்ச்சி செய்திருந்தாலும், கணவன் மேற்கண்டபடி மனுப் போடமுடியாது.

## விவாக ரத்து

செக்ஷன் 13

(1) இச்சட்டத்திற்கு முன்பே திருமணம் நடந்திருந்தாலும் சரி; இச்சட்டம் வந்த பிறகு திருமணம் நடந்திருந்தாலும் சரி; அடியில் கண்ட காரணங்களினால் தங்களுடைய விவாகத்தை ரத்து செய்ய வேண்டுமென்று கணவனோ, மனைவியோ கோர்ட்டில் விவாக ரத்து மனுப் போடலாம் அதாவது:—(1) எதிர் மனுதார் விபசார வாழ்க்கை நடத்தி வந்தாலும் அல்லது (2) எதிர் மனுதார் இந்து மதத்தை விட்டுவிட்டு வேறு மதத்தைத் தழுவி விட்டாலும் அல்லது (3) மனுவுக்கு முன் தொடர்ச்சியாகக் குறைந்தது மூன்று வருடங்களாக எதிர் மனுதார் சுவஸ்தப்படுத்த முடியாத சித்த சுவாதீனமில்லாமல் இருந்தாலும் அல்லது (4) மனுவுக்கு முன் தொடர்ச்சியாகக் குறைந்தது மூன்று வருடங்களாக எதிர் மனுதார் சுவஸ்தப்படுத்த முடியாத தீவிரமான குஷ்ட ரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும், அல்லது (5) மனுவுக்கு முன் தொடர்ச்சியாகக் குறைந்தது மூன்று வருடங்களாக எதிர் மனுதார் பிறருக்குத் தாவக்கூடிய மேக வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும் அல்லது (6) எதிர் மனுதார் உலகத்தைத் துறந்து துறவறம் பூண்டு விட்டாலும் அல்லது (7) ஏழு அல்லது மேற்பட்ட வருடங்களாக எதிர் மனுதார் உயிருடன் இருப்பது பற்றிய தகவல் ஒன்றும் தெரியாமல் இருந்தாலும் — அதாவது எதிர் மனுதார் உயிருடன் இருந்தால் சகஜமாக யார் யாருக்குத் தெரிந்திருக்குமோ அவர்கள் ஒருவருக்கும் அத்தகவல் தெரியாமல் இருந்தாலும்— (8) தம்பதிகள் பிரிந்து வசித்து வரலாமென்று கோர்ட்டுமூலம் தீர்ப்பு ஏற்பட்டு இரண்டு அல்லது அதிகமான வருடங்கள் கடந்தும் எதிர் மனுதார், மனுதாருடன் கணவன் மனைவியாகத் திரும்பவும் கூடிவாழாமல் இருந்தாலும் அல்லது (9) எதிர் மனுதார் மனுதாருடன் திரும்பவும் தாம்பத்திய வாழ்க்கை வாழ வேண்டுமென்று கோர்ட்டு மூலம் தீர்ப்பு ஏற்பட்டிருந்தும் இரண்டு அல்லது அதிக வருடங்களாக் எதிர் மனுதார் அப்படிச் செய்யத் தவறி விட்டாலும்—மேற்கண்ட 9 சந்தர்ப்பகளில் எது இருந்தாலும் கணவனோ மனைவியோ விவாக ரத்து மனுப் போடலாம். அக்காரணகளில் எது உண்மையாக இருந்தாலும் கோர்ட் மூலம் விவாக ரத்து டிக்ரி ஏற்படும்.

(2) மேலே கண்ட காரணங்களில் எக்காரணத்தைக் கொண்டும் விவாக ரத்து மனுப் போட கணவனுக்கும் உரிமை உண்டு; மனைவிக்கும் உரிமை உணடு. இன்னும இரண்டு சந்தர்ப்பங்களில் விவாக ரத்து மனுப்போட மனைவிக்கு மட்டில் உரிமை உண்டு. அவையாவன:— (1) இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு ஒரு மனைவி உயிருடனிருக்கும்போது, கணவன் வேறு மனைவியைத் திருமணம் செய்து கொண்டிருந்

தால், எந்த மனைவியும் விவாக ரத்து மனுப் போடலாம். ஆனல் விவாக ரத்து மனுப் போடும்போது மற்ற மனைவியும் உயிருடன் இருந்தால்தான் மனுப்போட மனுதாருக்கு உரிமை உண்டு. (குறிப்பு:— இச்சட்டம் வந்த பிறகு ஒரு மனைவி உயிருடன் இருக்கும் போது, வேறு மனைவியை திருமணம் செய்து கொள்ளுவது செல்லவே செல்லாது. அது திருமணமே ஆகாது. அச்சந்தர்ப்பத்தில் விவாக ரத்துச் செய்துகொள்ள அவசியமே இல்லை. ஏனென்றல் சட்டப்படி விவாகமே இல்லை. அச்சந்தர்ப்பத்தில் திருமணம் செல்லா தென கோர்ட் மூலம் ஊர்ஜிதத் தீர்ப்பு (Decree of nullity) பெற்றுக் கொள்ள 'மனைவிக்கு' உரிமை உண்டு என்பது முன்பு விளக்கப்பட்டுள்ளது. சென்னை ராஜ்யம் சம்பந்தப்பட்டவரையில், சென்னைப் பலதாரத் தடைச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலி ருந்தே ஒரு மனைவி உயிருடனிருக்கும்போது வேறு மனைவியை மணம் செய்து கொள்ளுவது செல்லாதென்பதும் கவனிக்கத்தக்கது.) (2) திருமணம் நடந்த பிறகு, கணவனுனவர், பல வந்தக்கற்பழித்தல் (Rape) அல்லது இயற் கைக்கு விரோதமான பும்மைதுனம்(Sodamy) அல்லது மிருகமைதுனம் (Bestialty) இக்குற் றங்களைப் புரிந்திருந்தாலும் விவாக ரத்துக்கு மனுப்போட மனைவிக்கு உரிமை உண்டு.

## சாதாரணமாக, திருமணமாகி மூன்று வருடங்களுக்குள் விவாக ரத்து மனுப்போட முடியாது

(1) மனுத் தேதியில், தம்பதிகளுக்குத் திருமணமாகி மூன்று வருடங்கள் முடிந்திருந் தால்தான் விவாக ரத்துககாக மனுப் போடலாம். ஆனல் இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. இது விஷயமாக ஹைகோர்ட் டாரால் விதிகள் இயற்றப்படும். அவ்விதிகளை அனுசரித்து மேற்கண்ட மூன்று வருடங்களுக் குள்ளாகவே விவாக ரத்து மனுப்போடுவதை அனுமதிக்கக் கோர்ட்டுக்கு அதிகாரம் இருக் கிறது. அதாவது, மனுதார் அசாதாரணமான கஷ்ட நிலைமையில் இருந்தாலும் அல்லது எதிர் மனுதார் அசாதாரணமான துன்மார்கி யாக இருந்தாலும் மேற்கண்ட மூன்று வருடங்களுக்குள்ளாகவே மனுதார் விவாக ரத்து மனுக் கொடுப்பதை கோர்ட்டார் அனு மதித்து மனுவை விசாரிக்கலாம். விவாக ரத்து மனுவை விசாரிக்கும்போது, மனுதாரரான வர் பொய் சொல்லியோ, விஷயக்களை மறைத்தோ மேற்கணடபடி அனுமதி பெற்றி ருப்பதாகக் கோர்ட்டுக்குத் தோன்றினல், கோர்ட்டார் டிக்ரி செய்யும் போது அந்த டிக்ரியானது திருமணத் தேதியிலிருந்து மூன்று வருடங்கள் சென்ற பிறகுதான் அமுலுக்கு வருமென்று தீர்ப்பு செய்யலாம். அல்லது விவாக ரத்து மனுவையே தள்ளிவிடலாம். அப்படி மனுத் தள்ளப்பட்டாலும், திருமண மாகி மூன்று வருடங்களான பிறகு, அதே காரணங்களைக்கொண்டு மனுதார் மறுபடியும் விவாக ரத்து மனுப்போட உரிமை உண்டு.

செக்ஷன் 14

(2) திருமணமாகி மூன்று வருடங்களுக் குள்ளாகவே, விவாக ரத்து மனுப்போடுவதற்கு அனுமதி கொடுப்பதா வேண்டாமா என்று கோர்ட்டார் ஆலோசிக்கும்போது சில விஷயங் களையும் கவனிக்கவேண்டும். அதாவது தம்பதி களுக்குப் பிறந்திருக்கும் குழந்தைகளின் அக் கறை என்ன என்பதையும், மேற்கண்ட மூன்று வருடங்களுக்குள் தம்பதிகள் ஒத்துப்போக நியாயமாக இடம் இருக்கிறதா என்பதையும் கவனித்துக் கோர்ட்டார் அனுமதியளிக்க வேண்டும்.

## விவாக ரத்துச் செய்து கொண்டவர்கள் மறுபடியும் எப்பொழுது வேறு மணம் செய்து கொள்ளலாம்?

செக்ஷன் 15

விவாக ரத்து டிக்ரி ஏற்பட்ட பிறகு, முன்பு கணவன் மனைவியாக இருந்த எவரும் வேறு திருமணம் செய்துகொள்ளலாம். ஆனல் முதல் கோர்ட்டில் டிக்ரி தேதியிலிருந்து ஒரு வருடத்திற் குள் அவ்விருவரில் எவரும் மறு மணம் செய்துகொள்ளக் கூடாது. முதல் கோர்ட் டிக்ரியின் மீது அப்பீல் செய்யும் உரிமை இல்லாமல் இருந்தால் மேலேகண்ட கெடுவுகருப் பிறகு தான் மறுமணம் செய்து கொள்ளலாம். முதல் கோர்ட்டு டிக்ரியின் மீது அப்பீல் செய்யக்கூடிய உரிமை இருந்தால், அப்பீல் செய்யவேண்டிய கெடுவுக்குள் மறுமணம் செய்துகொள்ள முடியாது. முதல் கோர்ட்டு டிக்ரியின் மீது அப்பீல் செய்யப்பட்டிருந்தால், அந்த அப்பீல் தள்ளுபடியானுல்தான் அதன் பிறகு மறுமணம் செய்துகொள்ள முடியும். எப் படியும் முன்கண்டபடி, முதல் கோர்ட்டில் விவாா ரத்து டிக்ரி ஏற்பட்ட தேதியிலிருந்து ஒருவருடத்திற்குள் மறுமணம் செய்துகொள் வது சட்ட விரோதமாகும்.

## திருமணமே செல்லாமல் இருக்கும் போது அத்தம்பதிகளுக்குப் பிறக்கும் குழந்தைகளின் நிலைமை.

[சில திருமணங்கள் ஆரம்பத்திலிருந்தே

செல்லாதென்பதை செக்ஷன் 11-ல் கவனித்தோம். (void Marriages). சில

செக்ஷன் 16

திருமணங்களை தம்பதிகளில் ஒருவர் மறுத்துச் செல்லாதெனச் செய்துவிடக் கூடுமென்பதையும் செக்ஷன் 12-ல் கவனித்தோம். (voidable Marriages) இச்சத்தர்ப்பங்களில் தம்பதிகள் ஒருவர் கோர்ட்டுக்கு மனுப்போட்டு, திருமணம் செல்லாதென கோர்ட்டுத் தீர்ப்பு மூலம் ஸ்தாபித்துக் கொள்ளலாம் என்பதும் விளக்கப்பட்டது.] அவ்விதம் கோர்ட் மூலம் டிக்ரி ஏற்படுவதற்கு முன்பு அத்தம்பதிகளுக்குப் பிறந்திருக்கும் குழந்தைகளும் சரி; அதற்கு முன்பு மனைவியின் வயிற்றில் அத்தம்பதிகளுக்கு ஜனித்திருக்கும் குழந்தைகளும் சரி அத்தம்பதிகளுக்குச் சட்டபூர்வமாகப் பிறந்த குழந்தைகளாகவே சட்டத்தால் பாலிக்கப்படும். அதாவது அத் தாய்தகப்பனுடைய திருமணம் சட்டபூர்வமாகவும் செல்லுபடியுள்ளதாகவும் இருந்து அவர்களுக்குக் குழந்தைகள் பிறந்தால் எப்படியோ அப்படியேதான் இக்குழந்தைகளும். ஆனால் அக்குழந்தைகளுக்குத் தங்களுடைய தாய் தகப்பன் இருவர்களுடைய சொத்துக்களில் மட்டில் சொத்துரிமை ஏற்படும்.

## மனைவியோ கணவனோ உயிருடன் இருக்கும்போது திருமணம் செய்து கொள்ளுவது செல்லாது; குற்றமாகும், தண்டனை உண்டு.

இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு திருமணம் செய்துகொள்ளும் இரண்டு இந்துக்களில் எவருக்காவது அப்போது கண

செக்ஷன் 17

வனோ, மனைவியோ உயிருடனிருந்தால், இவர்கள் செய்து கொள்ளும் திருமணமே செல்லாது. (Void) மேலும் மனைவி உயிருடனிருக்கும்போது கணவன் வேறு மனைவியைத் திருமணம் செய்து சொள்வதும்; கணவன் உயிருடனிருக்கும்போது மனைவியானவள் வேறு கணவனுடன் திருமணம் செய்துகொள்வதும் இந்தியன் பீனல் கோடு என்ற குற்றங்களைபபற்றிய சட்டத்தின் செக்ஷன் 494, 495 இந்த ஷரத்துக்களின்படி குற்றமாகும். (இக் குற்றங்களுக்கு ஏழு அல்லது பத்து வருடங்கள் வரை சிறை தண்டனையும் அபராதமும் விதிக்கப்படலாம்.)

## இந்து விவாகம் பற்றிய வேறு சில நிபந்தனைகளை மீறுவதும் குற்றமாகும் தண்டனை உண்டு.

(a) செக்ஷன் 5 (iii) ஷரத்தில் கண்ட நிபந்தனையை ஒருவர் மீறினால் (அதாவது திருமணம் செய்து கொள்ளும்

செக்ஷன் 18

போது மணமகனுக்கு 18 வயதும் மணமகளுக்கு 15 வயதும் பூர்த்தியாகி இருக்க வேண்டுமென்ற நிபந்தனை மீறப்பட்டால்) அது குற்றமாகும். 15 நாள் வரை சிறை தண்டனையோ, அல்லது ரூ. 1000 வரை அபராததண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

(b) செக்ஷன் (iv)ல் கண்ட நிபந்தனையையோ அல்லது செக்ஷன் 5 (v)ல் கண்ட நிபந்தனையையோ (அதாவது தொன்று தொட்ட பழக்கவழக்கத்தால் அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய, தடுக்கப்பட்ட உறவுமுறை உள்ளவர்களும், சபிண்ட'ர்களாக இருப்பவாகளும் திருமணம் செய்துகொள்ளக் கூடாதென்ற நிபந்தனைகளை) மீறித் திருமணம் செய்து கொள்ளுவதும் குற்றமாகும். இக்குற்றத்திற்கு ஒரு மாதம் வரை சிறை தண்டனையோ, அல்லது ரூபாய் ஆயிரம் வரை அபராத தண்டனையோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

(c) செக்ஷன் 5 (vi)ல் கண்ட நிபந்தனை மீறப்பட்டால் (அதாவது மணமளுக்கு 18 வயது பூர்த்தியாகாதிருந்தால் கார்டியனுடைய சம்மதத்தின் பேரில்தான் திருமணம் செய்து கொள்ளலாமென்ற நிபந்தனை மீறப்பட்டால்) அதுவும் குற்றமாகும். அக்குற்றத்திற்கு ரூ. 1000 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

## கோர்ட்டுகளின் அதிகாரமும் வழக்குமுறையும், எந்தக் கோர்ட்டில் மனுப்போடுவது?

இச்சட்டப்படி போடக் கூடிய எவ்வித மனுவும் ஜில்லா கோர்ட்டில்தான் தாகல்செய்யப்பட வேண்டும். எந்த இடத்தில்

செக்ஷன் 19

தம்பதிகளுடைய திருமணம் நடந்ததோ, அல்லது எந்த இடததில் தம்பதிகள் சேர்ந்து வசிக்கின்றனரோ, அல்லது கடைசியாக வசித்து வந்தனரோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள ஜில்லாக் கோர்ட்டில் தான் மனுப் போட வேண்டும்.

## மனுவில் காண வேண்டிய விஷயங்களும் உறுதிமொழியும்.

(1) இச்சட்டப்படி போடக்கூடிய ஒன்

வொரு மனுவிலும் விஷயங்கள் தெளிவாகக் காணப்பட வேண்டும். அதாவது மனுவில் கேழ்கப்படும் பரிகாரங்களுக்கு ஆதாரமாக இருக்கும் விஷயங்கள் கூடுமான வரையில் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும். மனுதாரும், தம்பதிகளில் மற்றவராகிய எதிர் மனுதாரும் ஒன்று சேர்ந்து ஒக்குமத்தாக அம்மனுக் கொக்கப்படவில்லை என்பதும் மனுவில் சொல்லப்படவேண்டும்.

செக்ஷன் 20

(2) தாவாக்களுக்கு எப்படி உறுதிமொழி செய்யவேண்டுமோ அதேவிதம் மனுவில் கண்ட விஷயங்கள் எல்லாம் உண்மை என்று மனுதார் மனுவில் உறுதிமொழிக் கையெழுத்தும் போடவேண்டும்.

## சிவில் வழக்கு முறைச் சட்டப்படியே நடவடிக்கைகள் நடத்தப்படும்

செக்ஷன் 21

இச்சட்டத்தில் கண்ட மற்ற ஷரத்துக்களுக்குட்பட்டும், இச்சட்டப்படி ஹைகோர்ட்டார் செய்யக்கூடிய விதிகளுக்குட்பட்டும், இச்சட்டப்படி ஏற்படும் எல்லா நடவடிக்கைகளும் 1908-ஆம் வருடத்திய 5-வது மத்திய சட்டமாகிய சிவில் வழக்கு முறைச் சட்டத்தில் கண்ட முறைப்படியே (Code of civil procedure) நடத்தப்படும்.

## இச் சட்டப்படி எழும் நடவடிக்கைகளைப் பகிரங்கமாக விசாரிக்க வேண்டியதில்லை. நடவடிக்கைகளை அச்சடித்து பித்சுரப் படுத்துவதும் கூடாது.

செக்ஷன் 22

(1) இச்சட்டப்படி ஏற்படும் நடவடிக்கைகளில் எந்தக் கட்சிக்காரராவது பரிரங்க விசாரணை வேண்டாம் என்று கேட்டுக் கொண்டாலும் சரி; அல்லது கோர்ட்டாரே அப்படி அபிப்பிராயப் பட்டாலும் சரி; நடவடிக்கைகளைப் பகிரங்கமாக விசாரணை செய்யாமல் பிரத்தியேக விசாரணை செய்யப்படும். (அதாவது இந்த நடவடிக்கைகளில் சம்பந்தமில்லாத பொதுமக்கள் எவரும் இவ் விசாரணைகளைக் கவனிக்க முடியாமல் தடுத்து, கோர்ட்டார் விசாரணை செய்யலாம்.) மேலும் இச்சட்டப்படி ஏற்படும் நடவடிக்கைகளைப் பற்றிய விஷயங்களைக் கோர்ட்டாரின் முந்திய அனுமதியில்லாமல் அச்சடிப்பதும் பிரசுரம் செய்வதும் சட்ட விரோதமாகும்.

(2) மேலே கண்ட ஷரத்துக்கு முரணாக இச் சட்ட நடவடிக்கைகள் பற்றிய விஷயங்களை ஒருவர் அச்சடித்தாலும் பிரசுரம் செய்தாலும் அது குற்றமாகும். அக்குற்றத்திற்கு ரூ. 1000 வரையில் அபராதம் விதிக்கப்படலாம்.

## நடவடிக்கைகளில் ஏற்படும் டிக்ரி. கோர்ட்டால் கவனிக்கப்படவேண்டி விஷயங்கள்.

செக்ஷன் 23 (1)

இச்சட்டப்படி தாகல் செய்யப்படும் நடவடிக்கைகளில், எதிர் மனுதார் கட்சியாடினலும் சரி, கட்சியாடாமல் இருந்தாலும் சரி, கீழே கண்டிருக்கும் விஷயங்களைக் கோர்ட்டார் கவனித்து அவை திருப்திகரமாக இருந்தால்தான் மனுவில் கேட்கும் பரிகாரம் அளிக்கப்படும். அதாவது:— (1) மனுவில் கேட்டிருக்கும் பரிகாரங்களுக்குப் போதுமான காரணங்கள் இருக்கின்றன என்றும் மனுதார் தம்முடைய தவறையோ யோக்கிய தாம்சக் குறைவையோ பயன் படுத்திக்கொண்டு பரிகாரம் கேட்கவில்லை என்றும் (2) திருமணம் ஆன பிறகு எதிர் மனுதார் வேறு ஒருவருடன் விபசாரம் செய்த காரணத்தினல் மனுதார் பிரிந்து வசித்து வர செக்ஷன் 10 (1) (f) ஷரத்துப்படி கோர்ட்டின் உத்தரவு கேட்கும் மனுவிலும் சரி; எதிர் மனுதார் விபசார வாழ்க்கை வாழ்ந்து வருவதால் விவாக ரத்து செய்யப்படவேண்டுமென்று மனுதார் செக்ஷன் 13 (1) (j) ஷரத்தின்படி போடும் மனுவிலும் சரி; எதிர் மனுதாரின் செய்கைக்கு மனுதார் உதவியாகவோ, ஒக்குமத்தாகவோ, இல்லை என்றும் எதிர் மனுதாரின் செய்கை தெரிந்தும் மன்னித்துவிட்டதுபோல் இருந்துவிடவில்லை என்றும்; எதிர்மனுதார் மனுதாரிடம் குரூரமாக நடந்துகொண்ட காரணத்தைக் கொண்டு பரிகாரம் கேட்கப்படும் மனுவில், எதிர் மனுதாரின் செய்கையை மனுதார் மன்னித்துவிடவில்லை என்று (3) மனுதாரும் எதிர்மனுதாரும் ஒக்குமத்தாக இருந்து மனுப்போட்டு நடவடிக்கை நடத்தவில்லை என்றும் (4) நடவடிக்கை எடுக்க அனுவசியமான அல்லது நியாயமில்லாத காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும் (5) பரிகாரம் அளிக்க வேறு சட்ட பூர்வமான தடை ஒன்றுமில்லை என்றும் — கோர்ட்டுக்குத் திருப்திகரமாகத் தோன்றினல்தான் மனுதார் கேட்கும் பரிகாரம் அளிக்கப்படும். அப்படி இல்லாவிட்டால் மனு தள்ளுபடி செய்யப்படும்.

## முதலில் சமரசம் செய்ய முயற்சி செய்வதே கோர்ட்டின் கடமையாகும்.

இச்சட்டப்படி அளிக்கக்கூடிய பரிகாரத்தை

அளிக்கு முன், வழக்கின் ரீதியையும் சந்தர்ப்பங்களையும் உத்தேசித்து, தம்பதிகளுக்குள் சமரசம் செய்வது சாத்தியப்படுமானால், முதலில் அப்படி சமரசம் செய்ய முயற்சி செய்வதே கோர்ட்டின் கடமையாகும்.

செக்ஷன் 23 (2)

## நடவடிக்கை நடக்கும்போது ஜீவனாம்சமும் — நடவடிக்கைச் செலவும். (கணவனுக்கும் அளிக்கப்படலாம் - மனைவிக்கும் அளிக்கப்படலாம்.)

செக்ஷன் 24

இச்சட்டப்படி போடப்படும் எந்த நடவடிக்கைகளிலும், கணவனோ, மனைவியோ கீழே கண்டபடி கோர்ட்டுக்கு மனுப் போடலாம். அதாவது தம்முடைய காலட்சேபத்திற்கோ அல்லது அந்த நடவடிக்கைக்கு அவசியமாகத் தாம் செய்யவேண்டிய செலவுக்கோ போதுமான தனி வருமானம் தமக்கு இல்லை என்றும் அதற்காக எதிர் மனுதாரிடமிருந்து தமக்குத் தொகை கொடுக்கும்படி உத்திரவாக வேண்டுமென்றும் கேட்டு மனுப் போடலாம். அது சரி என்று கோர்ட்டுக்குத் தோன்றினால், எதிர்மனுதாரானவர் மனுதாருக்கு அந்த நடவடிக்கைச் செலவைக் கொடுப்பதுடன், நடவடிக்கை முடியும் வரையில் மாதாமாதம் ஒரு தொகை கொடுத்துவர வேண்டுமென்றும் உத்தரவு செய்ய கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. மனுதாரின் சொந்த வருமானம் எவ்வளவு என்பதையும், எதிர் மனுதாரின் வருமானம் எவ்வளவு என்பதையும் ஆராய்ந்து பார்த்துக் கோர்ட்டுக்கு நியாயமாகத் தோன்றும் விதம் மேலே கண்டபடி உத்திரவு பிறப்பிக்கப்படும்.

## நிரந்தர ஜீவனாம்சம் மனைவியும் வாங்கலாம்; கணவனும் வாங்கலாம்

செக்ஷன் 25 (1)

இச்சட்டப்படி அதிகாரம் செலுத்தும் எந்தக் கோட்டிலும், தீர்ப்பு ஏற்படும் போதோ அல்லது தீர்ப்பு ஏற்பட்ட பிறகோ, தமக்கு ஜீவனாம்சம் வேண்டுமென்று கேட்டு மனைவியும் மனுப் போடலாம்; கணவனும் மனுப் போடலாம். மனுதாரின் காலட்சேபத்திற்காகவும் போஷணைக்காகவும் ஒரு தொகையை மொத்தமாகவோ, அல்லது மனுதாரின் ஆயுள் வரை மாதாமாதமோ, அல்லது வேறு கெடுக்களின்படிக்கோ, மனுதார் மறுவிவாகம் செய்து கொள்ளும் வரை மனுதாருக்கு எதிர்மனுதார் ஜீவனாம்சம் கொடுத்து வரவேண்டுமென்று உத்தரவிட கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. எதிர் மனுதாரின் சொந்த வருமானம், அவருக்குள்ள வேறு சொத்துக்கள், மனுதாரின் வருமானம், சொத்து, மனுதார், எதிர் மனுதார் இவர்களின் நடத்தை இவ்விஷயங்களைக் கவனித்து எதிர் மனுதார் கொடுக்கவேண்டிய மொத்தத் தொகை அல்லது ஜீவனாம்சத்தொகை எவ்வளவு என்று கோர்ட்டுக்கு நியாயமாகத் தோன்றும் விதம் நிர்ணயம் செய்யப்படும். எதிர் மனுதார் கொடுக்கும்படி உத்தரவாகும் தொகைக்கு எதிர் மனுதாரின் ஸ்தாவர சொத்தின் பேரில் ஜாமீன் ஜவாப்தாரி பாத்தியத்தை ஏற்படுத்தவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## ஜீவனாம்ச உத்தரவு ஏற்பட்ட பிறகு நிலைமை மாறினால்.

செக்ஷன் 25 (2)

மேலே கண்ட ஷரத்தின்படி ஜீவனாம்சம் சம்பந்தமாக கோர்ட்டால் உத்திரவு ஏற்பட்ட பிறகு, கணவன் மனைவி இருவர்களில் எவருடைய நிலைமையில் மாறுதல்கள் ஏற்பட்டிருந்தபோதிலும், இருவரில் எவரும் கோர்ட்டுக்கு மனுப்போடுவதின் பேரில், கோர்ட்டுக்கு யுக்தமாகத் தோன்றும் விதம் ஜீவனாம்ச உத்தரவை மாற்றவும், திருத்தவும், ரத்து செய்யவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## ஜீவனாம்சம் வாங்குபவர் மறு விவாகம் செய்துகொண்டாலும், விபசாரம் செய்தாலும் ஜீவனாம்சம் போய்விடும்.

செக்ஷன் 25 (3)

கோர்ட்டின் உத்தரவுப்படி ஜீவனாம்சம் அடைந்துவரும் மனைவியானவள் கற்பை இழந்தாலும் சரி; ஜீவனாம்சம் அடைந்துவரும் கணவன் தாம் மணம் செய்துகொள்ளாத ஸ்திரீயுடன் புணர்ச்சி செய்திருந்தாலும் சரி— ஜீவனாம்ச உத்தரவை ரத்துசெய்துவிடக் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## குழந்தைகளின் பாதுகாப்பு

செக்ஷன் 26

இச்சட்டப்படி நடக்கும் கோர்ட் நடவடிக்கைகளில், தீர்ப்பு ஏற்படும் முன்பும் சரி, தீர்ப்பிலும் சரி, மைனர் குழந்தைகளின் சுவாதீனம், போஷணை, படிப்பு இவ்விஷயங்களைப் பற்றி நியாயமாகத் தோன்றும் ஏற்பாடுகளைச் செய்ய கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு. முடிந்தவரையில் மைனர் குழந்தைகளின் அபிப்பிராயத்தை அனுசரித்தே கோர்ட்டால் உத்திரவு பிறப்பிக்கப்படும். டிக்ரி ஏற்பட்ட பிறகும், மைனர் குழந்தைகள் விஷயமாக

87739

மேற்கண்ட விஷயங்களைப் பற்றிய ஏற்பாடுகள் செய்யும்படி கோரி மனுப் போடலாம். இது விஷயமாகக் கோர்ட்டினால் பிறப்பிக்கப்படும் தாற்காலிக உத்தரவுகளையும் சரி, டிக்ரி மூலம் பிறப்பிக்கும் உத்தரவுகளையும் சரி, தேவையான [illegible] ரத்து செய்யவும் அமுல் இல்லாமல் நிறுத்திவைக்கவும், மாற்றவும் கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## சொத்துக்களின் விநியோகம்

செக்ஷன் 27

இச்சட்டப்படி ஏற்படும் நடவடிக்கைகளில் டிக்ரி ஏற்படும்போது தம்பதிகளுக்குத் திருமண சமயத்திலோ கொஞ்சம் முன் பின்னுகவோ நன்கொடையாக அளிக்கப்பட்டு கணவன் மனைவி இருவருக்கும் பொதுச் சொந்தமாக இருக்கும் சொத்துக்களைப் பற்றியும் நியாயமாகத் தோன்றும் ஏற்பாடுகளைச் செய்ய கோர்ட்டுக்கு அதிகாரமுண்டு.

## டிக்ரிகளை நிறைவேற்றுவது, அப்பீல் செய்வதுபற்றி

செக்ஷன் 28

இச்சட்ட நடவடிக்கைகளில் ஏற்படும் டிக்ரிகளை சிவில் கோர்ட்டுகளின் அசல் வியாஜ்ய டிக்ரிகளை எப்படி நிறைவேற்றலாமோ அதே விதம் நிறைவேற்ற வேண்டும்; இச்சட்ட நடவடிக்கைகளில் ஏற்படும் டிக்ரிகளின் பேரிலும் அவ்வப்பொழுது ஏற்படும் சட்டங்களின்படி அப்பீல் செய்யலாம். ஆனல் செலவு தொகை சம்பந்தமான உத்தரவின் பேரில் மட்டில் அப்பீல் செய்ய முடியாது.

## விதிவிலக்குகள்

செக்ஷன் 29

(1) இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு இந்துக்களிடையே ஏற்பட்ட எந்தத் திருமணங்களும், மற்றப்படி சட்ட பூர்வமாக இருந்தால், திருமணம் செய்துகொண்ட தம்பதிகள் ஒரே கோத்திரம் அல்லது பிரவரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால் மட்டுமோ அல்லது அவர்கள் வெவ்வேறு மதப் பிரிவினைகளையோ, வெவ்வேறு ஜாதிகளையோ, அல்லது ஒரே ஜாதியின் வெவ்வேறு உட் பிரிவுகளையோ சேர்ந்தவர்களாக இருக்கும் காரணத்தால் மட்டுமோ - அத்திருமணங்கள் செல்லாமல் போகாது. அதாவது மேற் கண்டபடி ஏற்பட்டிருக்கும் இந்துத் திருமணங்கள் மற்றபடி சட்டபூர்வமாக இருந்தால் அவை செல்லுபடியுள்ளவையேயாகும்.

(2) இச்சட்டத்திற்கு முன்பு ஏற்பட்ட இந்துத் திருமணங்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் சரி, இச்சட்டத்திற்குப் பிறகு ஏற்பட்ட இந்துத் திருமணங்கள் சம்பந்தப்பட்டவரையிலும் சரி தொன்றுதொட்ட பழக்கவழக்கங்களின்படிக்கோ அல்லது வேறு விசேஷ சட்டங்களின் படிக்கோ விவாகரத்துசெய்துகொள்ள உரிமை இருந்தால் அவ்வுரிமையை இச்சட்ட ஷரத்துக்கள் எதுவும் பாதிக்க மாட்டாது.

(3) இச்சட்டம் அமுலுக் வரும்போது கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டு 'பெண்டிங்' கில் இருந்துவரும் நடவடிக்கைகள் - அதாவது திருமணம் செல்லாதென ஊர்ஜிதம் செய்வதற்காகவோ, அல்லது திருமணத்தை ரத்துசெய்யவோ, அல்லது தம்பதிகள் பிரிந்து வசித்து வர கோர்ட்டு உத்தரவுக்காகவோ போடப்பட்டு, முடிவடையாமல் இருக்கும் நடவடிக்கைகள்— எல்லாம் இச்சட்டம் இயற்றப்படாமல் இருந்தால் எப்படியோ அப்படியே நடத்தப்பட்டு முடிவு செய்யப்படும்.

(4) இச்சட்டம் வருவதற்கு முன்போ, பிறகோ, 1954-ம் வருடத்திய 43-வது மத்தியச் சட்டமாகிய விசேஷ விவாகச் சட்டப்படி இந்துக்களுக்குள் செய்துகொள்ளப்படும் திருமணங்களுக்கு அச்சட்டமே (அதாவது விசேஷ விவாகச் சட்டமே) பொருந்தும். இச்சட்ட ஷரத்துக்கள் எதுவும் அவ்விதம் திருமணம் செய்துகொண்டவர்களைப் பாதிக்காது.

## இச்சட்டத்தால் ரத்து செய்யப்பட்ட சட்டங்கள்

செக்ஷன் 30

அடியில்கண்ட சட்டங்கள் இச்சட்டத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளன:— (1) 1946-ம் வருடத்திய 28-வது மத்தியச் சட்டம் அதாவது இந்துக்களுக்குள் ஒரே கோத்திரம் அல்லது பிரவரத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளும் ஒரே வகுப்பின் வெவ்வேறு உட்பிரிவைச் சேர்ந்தவர்களுக்குள்ளும் செய்துகொள்ளும் திருமணங்கள் செல்லுபடியாகுமென்ற சட்டம். (2) 1949-ம் வருடத்திய 21-வது மத்தியச்சட்டம் — அதாவது வெவ்வேறு ஜாதி அல்லது மதம் அல்லது உட்பிரிவைச் சேர்ந்த இந்துக்களுக்குள் செய்துகொள்ளும் திருமணங்கள் செல்லுபடியாகுமென்ற சட்டம் (3) 1946-ம் வருடத்திய பம்பாய் பலதாரத் தடைச்சட்டம் (4) 1947-ஆம் வருடத்திய பம்பாய் இந்து விவாகரத்துச் சட்டம் (5) 1949-ம் வருடத்திய 6-வது சென்னைச் சட்டமாகிய சென்னை பலதாரத் தடை—விவாகரத்துச் சட்டம் (6) 1950-ஆம் வருடத்திய சௌராஷ்டிரா இந்து பல தாரத் தடைச் சட்டம் (7) 1952-ம் வருடத்திய சௌராஷ்டிரா இந்து விவாகரத்துச் சட்டம்,




**மேனி அழகு மட்டும் இருந்தால் போதாது!**
**ஆடை அழகும் வேண்டும்!**
**ஆடை அழகு பெற**

**—: அறந்தாங்கி :—**

# 786 சங்கு சோப்பை

**வாங்கி உபயோகியுங்கள்**
**கட்டி 1-க்கு அணா 0-1-3தான்**




தயாரிப்பவர்:—

**இ. கா. ரு. மு. காதர் நயினா முகம்மது,**
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.

---

# 'ஜெயராம்' ஹெர்ணியா க்யூர்

## குடல்வாத நிவாரணியை உபயோகியுங்கள்.

**3—தினத்தில் குணம் தெரியும்.**


| | | | |
|---|---|---|---|
| **எலிமெண்டரி கேஸ்** | .... | ரூ. | 6-0-0 |
| **செகண்டரி கேஸ்** | ... | ரூ. | 11-0-0 |
| **அட்வான்ஸ் கேஸ்** | .... | ரூ. | 25-0-0 |

**உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.**

நத்தம்,
10—11—48

மகா-ா-ா-ஸ்ரீ மானேஜர் அவர்களுக்கு நலம். நமஸ்காரம், நலமறிய ஆவல், தாங்கள் அனுப்பிய சொர்ண செந்தூரம் மருந்தை சென்ற வியாழக்கிழமை முதல் சாப்பிட்டு வருகிறேன். அதன் குணம் மூச்சுஜாஸ்தியாக இல்லை. கை கால் அசதி இல்லை. அடுத்த வியாழக்கிழமை முதல் காயசுத்தி லேகியத்தையும், எண்ணெயையும் சாப்பிடப் போகிறேன். ஹெர்ணியாவின் உபத்திரவம் ஜாஸ்திஇல்லை. ஆனால் வீக்கம் மட்டும் வாடவில்லை. தங்களுடைய அட்வைஸை எதிர்பார்க்கும்,

(Sd) N. M. MAHAMED CHAN KHAN
Nattam, (Madura Dist.)




To
The Manager
JAYARAM'S DISPENSARY,
Kumbakonam

NIHUNG TEA ESTATE,
P. O. Nihung, Kotagiri;
Nilgiri Hills;
7 — 11 — 48

Sir, தாங்கள் அனுப்பிய காயசுத்தி ஸ்பெஷல் கிடைத்தது. இந்த ஒருவாரமாக அதை உபயோகித்துக் கொண்டு வருகிறோம், ஆனால் என் தம்பிக்கு இருந்த விதைப்பையின் வீக்கம் பாதிக்குமேல் குறைந்து விட்டது. இன்னும் இந்த லேகியம் பூராவும் சாப்பிட்டு முடிவதற்குள் அனேகமாக மறுபாதியும் குறைந்துவிடும் என்று நம்புகிறேன். கூடிய சீக்கிரம் குணமடையும் என்றுஎன்னுடைய நம்பிக்கை.

இப்படிக்கு தங்கள் அன்புள்ள,
(Sd) D. L. VINCENT

**G. ஜெயராம் வைத்தியசாலை, (Regd)**
**28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, :: கும்பகோணம்.**

Regd. No. M. 5399 "THE VAKIL" July - August 1955


ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ..

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
SURAJ AGENCIES,
**MADRAS.**

*For Coimbatore, Palghat & Nilgiris:*
B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street.
**COIMBATORE.**